வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 26.01.2023 வியாழக்கிழமை இதழ் : 48 பக்கங்கள் : 16




## சரணடைந்த புலிகளுக்கு நடந்தது என்ன? நேரில் பதிலளிக்க படைகளுக்கு உத்தரவு

கொழும்பு, ஜன. 26

தமிழீழ விடுதலைப் புலிகளின் சரணடைந்த உறுப்பினர்களுக்கு என்ன நடந்தது என்று தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு முன்பாக நேரில் முன்னிலையாகி பதிலளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் மார்ச் 28ஆம் திகதி இராணுவத்தை நேரில் முன்னிலையாகுமாறு ஆணைக்குழு தனது உத்தரவில் தெரிவித்துள்ளது.

சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் தொடர்பான பல்வேறு தகவல்களை கோரி இலங்கை இராணுவத்துக்கு எதிராக, தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மேன்முறையீடு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

15

## இன பிரச்னை தீர்வு விவகாரம் இன்று சர்வகட்சிகள் சந்திப்பு!

### தமிழரசு, தமிழ் மக்கள் கூட்டணி பங்கேற்கும்

கொழும்பு, ஜன. 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின்பேரில் சர்வகட்சி கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்குமாறு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இனப் பிரச்னை தீர்வுக்கு ஒருமித்த கருத்தை எட்டுவதற்கும் தேசிய

15

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு நேற்று வெளியானது

கொழும்பு, ஜன. 26

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று புதன்கிழமை இரவு 10. 45 மணியவில் வெளியானது.

பரீட்சை முடிவுகளை https://www.doenets.lk/ என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் எச். ஜே. எம். சி. அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சை கள் கடந்த டிசெம்பர் 18ஆம் திகதி நடைபெற்றமை குறிப்பிடத்தக்ககது. (ஐ)

# தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு புதியவர்கள் நியமிக்கப்படுவர்!



### நேற்றுக் கூடிய அரசமைப்பு பேரவை முடிவு சுயாதீன குழுக்களுக்கும் புதிய உறுப்பினர்கள்

கொழும்பு, ஜனவரி 26

**தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு நேற்று முதன்முறையாகக் கூடிய அரசமைப்பு பேரவை தீர்மானித்துள்ளது.**

தேர்தல் ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு,

15

## மாவீரரின் கல்லறை தமிழகத்தில் இடிப்பு!



தஞ்சாவூர், ஜன. 26

விடுதலைப் புலிகளின் மாவீரர் ஒருவரின் கல்லறை தமிழ்நாட்டில் இடிக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தஞ்சாவூர் - வடக்குவாசல் மயானத்தில் அமைந்திருந்த லெப். போசன் என்பவரின் கல்லறையே அபிவிருத்தி என்ற பெயரில்

15

## அடுத்த ஜனாதிபதி சஜித் பிரேமதாஸவே!

### மகிந்தவின் சோதிடர் கணிப்பு

கொழும்பு, ஜன. 26

நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக ரணசிங்க பிரேமதாஸவின் மகன் சஜித் பிரேமதாஸவே வருவார் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆஸ்தான சோதிடர் சுமணதாஸ அபேகுண

15

## தேர்தல் குழுவின் உறுப்பினர் சார்ள்ஸ் பதவியை துறந்தார்!

### ஆணைய தலைவரும் விலகுவாராம்




கொழும்பு, ஜன. 26

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் திருமதி பி. எம். எஸ். சார்ள்ஸ் தனது பதவியை துறந்துள்ளார். இதேநேரம், தேர்தல் ஆணையத்தின் தலைவர் நிமால் புஞ்சிஹேவாவும் பதவி விலகுவார் என்று எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

திருமதி சார்ள்ஸின் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன

15

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் வேட்பாளர்கள் அறிமுகம்!



மன்னார், ஜன. 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தலின் வேட்பாளர் அறிமுக கூட்டம் நேற்று புதன்கிழமை மன்னார்

15

## சுன்னாகம் வன்செயல் மூவர் சரணடைந்தனர்!

யாழ்ப்பாணம், ஜன. 26

சுன்னாகத்தில் நேற்று முன்தினம் வன்செயலில் ஈடுபட்ட குழுக்களைச் சேர்ந்த மூன்று பேர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

15

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023

தமிழ் தேசிய கூட்டமைப்பு

தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# இப்படியும் நடக்கிறது...!

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்து அதிகாலை அலரி மாளிகையை விட்டு, வெளியேறியபோது அவர் மீண்டும் அலரி மாளிகைக்கு வருவார் என்று அவர்கூட நினைத்திருக்கமாட்டார்.

ராஜபக்ஷக்களின் சகாப்தம் முடிந்துவிட்டது என்றே எல்லோரும் ஆரூடம் கூறினர். ஆனால், உடனேயே சுதாகரித்துக்கொண்ட ராஜபக்ஷ குடும்பம், அரசியலில் விட்ட இடத்தை பிடிக்க திட்டமிடத் தொடங்கியது.

அதிலும், குறிப்பாக கோட்டாபய தன்னை முன்னிறுத்தி 'வியத்மக' போன்ற அமைப்புகளை ஆரம்பித்து சிங்கள தேசியவாதத்தை விதைக்கத் தொடங்கினார். பின்னர், அவர் அதனை அறுவடை செய்ததையும் கண்டோம். அவரின் இந்த வளர்ச்சியின் பின்னால் அவருக்கு ஆதரவாக நின்றது சிங்கள ஊடகங்களில் முதன்மை ஊடகமான ஓர் ஊடக வலையமைப்புத்தான்.

அதனால்தான் அந்த ஊடக வலையமைப்பின் தலைவர் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு நெருக்கமானவராக அப்போது வலம் வந்தார். அண்மையில், அவர் வழங்கிய ஊடக செவ்வி ஒன்று தெற்கில் பலரின் கவனத்தையும் பெற்றிருந்தது.

மிகச்சிறிய அளவில் காலிமுகத் திடலில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 'அறகலய'வை 'கோட்டா கோ ஹோம்' என்று பெயரிட்டு அதனை பிரபல்யப்படுத்தியது மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோசித ராஜபக்ஷதான் என்ற செய்தியை அவர் அந்த செவ்வியில் தெரிவிக்கப்போய் அதுவே இன்று தெற்கின் பேசுபொருளாகியிருக்கின்றது.

கோட்டாவுடனான தமது குடும்பச் சண்டையில் அவர்கள் பத்த வைத்த நெருப்புத்தான், பின்னர் பற்றி எரிந்து அவர்கள் குடும்பத்தையே சுட்டெரித்துவிட்டது என்பதுதான் தெற்கில் இன்று பேசப்படும் செய்தி.

மிகச்சிறிய அளவில் தொடங்கப்பட்ட 'அறகலய' போராட்டத்தை 'கோட்டா கோ ஹோம்' என்ற பெயரில் யார் பிரபல்யப்படுத்தியிருந்தாலும், அதன் பரிணாம வளர்ச்சியில் மக்களின் கோபமே முக்கிய பங்குவகித்தது.

எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான பல நாட்களாக வரிசையில் காத்திருந்த மக்களும் எரிவாயுவைப் பெறமுடியாதபோது மீண்டும் மண்ணெண்ணெய் அடுப்புக்கு மாறியவர்களுக்கு மண்ணெண்ணெயும் கிடைக்கவில்லை. பால்மா முதல் பருப்பு வரை அனைத்துக்குமே வரிசையில் நின்ற மக்கள் இந்த அறகலயகாரர்களுடன் தாமும் வீதிக்கு வந்தனர்.

அதனால் அறகலயகாரர்களின் போராட்டம் மக்கள் போராட்டமாக எழுச்சிபெற்றது. அவர்களை வழிநடத்த யாரும் இருக்கவில்லை. அதனால், அவர்கள் ஜனாதிபதி மாளிகையையும் பிரதமர் வாசஸ்தலத்தையும் முற்றுகையிட்டனர்.

அப்படியொரு முற்றுகை நடந்திருக்காவிட்டால் கோட்டாபயவோ, மகிந்தவோ ஆட்சியிலிருந்து போயிருக்கமாட்டார்கள் என்பது வேறு சங்கதி.

ஆனால், அந்தப் போராட்டக்காரர்களை வழிநடத்த ஆட்கள் இல்லாததாலேயே அது பின்னர் காணாமல் போனது.

மே ஒன்பதாம் திகதி மகிந்தவை பதவியில் இருந்து இறக்கிய போராட்டம் வெற்றி பெற்றதால் அதற்குப் பின்னர் வந்த ஜூன் ஒன்பதை இலக்கு வைத்து போராட்டகாரர்கள் போராட, அன்று பசில் பதவி விலகினார். இதனால் உற்சாகமடைந்த போராட்டக்காரர்கள் ஜூலை ஒன்பதை இலக்கு வைத்து போராட்டத்தை தீவிரப்படுத்த, அன்றைய தினம் கோட்டாபய வீட்டை விட்டு அல்ல நாட்டை விட்டே ஓடவேண்டியதாயிற்று.

போராட்டகாரர்கள் கோட்டா கோ ஹோம் என்று பெயர்வைத்து போராட்டத்தை தொடங்கியதால், (அது யோசித வைத்த பெயராக இருந்தாலும்) கோட்டாபய நாட்டைவிட்டு போனதும் அதனை தொடர அவர்களுக்கு வேறு நியாயம் இருக்கவில்லை.

ரணில் கோ ஹோம் என்ற அவர்களின் அடுத்த கோஷம் மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

இப்போது உள்ளூராட்சி தேர்தலுக்கு திகதியிடப்பட்டு விட்டது. அதுவும் ஓர் ஒன்பதாம் திகதிதான். அதனால் சிலர் மார்ச் ஒன்பதாம் திகதியுடன் ரணில் அரசை வீட்டுக்கு அனுப்புவோம் என்கின்றனர்.

குறிப்பிட்ட திகதியில் தேர்தல் நடைபெறுமா என்பது இன்னமும் நம்பிக்கைக்கு உரியதாக இல்லாவிட்டாலும் - அப்படி தேர்தல் நடைபெற்றாலும் அது இந்த அரசுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தப்போவதில்லை.

மக்கள் இந்த அரசை நிராகரித்துவிட்டனர் என்பது இந்தத் தேர்தலின் மூலம்தான் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதல்ல. ஏற்கனவே, மக்கள் அதனை வெளிப்படுத்தி விட்டனர்.

இந்தத் தேர்தல் வேண்டுமானால், அடுத்து நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் பற்றியோ அல்லது பாராளுமன்ற தேர்தல் ஒன்று பற்றியோ ஒரு கருத்துக்கணிப்பாகத்தான் இருக்கும்.

ஆனால், தேர்தல் நடைபெறாமல் விட்டால் மக்களை வீதிக்கு இறக்கி போராடப் போவதாக இப்போது எதிர்க்கட்சிகள் கூறிவருகின்றன. சில தொழில்சங்கங்களும் அடுத்த பெப்ரவரியில் இதே ஒன்பதாம் திகதி போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றன. அறகலயகாரர்களின் அந்த அதே 'ஒன்பதை' தொழில்சங்கங்கள் தெரிவுசெய்தாலும், மாபெரும் போராட்டத்துக்கு தேர்தல் ஒன்றுக்காக வீதிக்கு இறங்கினால் மக்கள் அதற்காக வீதிக்கு இறங்குவார்களா என்பது தெரியவில்லை. மக்களுக்குத் தேர்தலை விட முக்கியமான பல தேவைகள் இருக்கின்றன.

பொறுத்திருந்து பார்ப்போம். என்ன நடக்கின்றது என்று.!

- ஊர்க்குருவி

# தமிழ் மக்களை ஜனாதிபதி ஏமாற்றுகிறார் சர்வகட்சி கூட்டத்தில் பங்கேற்க மாட்டோம்!

## திஸ்ஸ விதாரண சொல்கிறார்



கொழும்பு, ஜன. 26

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதாகக் கூறிக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தமிழ் சமூகத்தையும் சர்வதேசத்தையும் ஏமாற்றுகிறார். இவரின் ஏமாற்று செயல்பாடுகளில் பங்காளியாக முடியாது என்பதால் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் சர்வகட்சி தலைவர் கூட்டத்தில் கலந்துகொள்ளப் போவதில்லை.

அதிகாரத்தை பகிர்வதாக குறிப்பிட்டுக்கொண்டு நாட்டில் தேவையில்லாத பிரச்னைகளை தோற்றுவிப்பதை ஜனாதிபதி தவிர்த்துக்கொள்ள வேண்டும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சர்வகட்சி தலைவர் கூட்டம் தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டதை ஏற்றுக்கொண்டோம். நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு தீர்வு காண வேண்டிய கட்டாயம் காணப்படுகிறது. ஜனாதிபதி தலைமையில் கடந்த மாதம் 13ஆம் திகதி இடம்பெற்ற சர்வகட்சி தலைவர் கூட்டத்தில் உண்மை நோக்கத்துடன் கலந்துகொண்டேன்.

தமிழ் மக்கள் மத்தியில் சமஷ்டி பற்றி கருத்துரைக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் சமஷ்டி தொடர்பில் கருத்துரைக்கவில்லை. அதிகாரப் பகிர்வு விவகாரம் தேர்தல் கால பிரசாரமாகவே காணப்படுகிறது.

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தமிழ் மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றுகிறார். உண்மை நோக்கத்துடன் தீர்வு காணும் பேச்சுகள் இடம்பெறவில்லை. ஜனாதிபதியின் ஏமாற்று செயல்பாடுகளில் பங்காளியாகக்கூடாது என்பதால் ஜனாதிபதி தலைமையில் இன்று இடம்பெறும் சர்வகட்சி தலைவர் கூட்டத்தில் கலந்துகொள்ளப் போவதில்லை.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது அரசியல் வெற்றிக்காக இனப்பிரச்னை விவகாரத்தை பயன்படுத்திக்கொள்கிறார். இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் தான் மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது. நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபை தேர்தலை நடத்த முடியாத அளவுக்கு சட்ட சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொறுப்புக்கூற வேண்டும். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அமைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதன் பின்னணியில் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் ஜனாதிபதி செயல்படக்கூடாது.

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தமக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்துகொள்வார்கள். மாகாண சபை தேர்தலை நடத்த முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தேசிய நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் ஜனாதிபதி செயல்படக் கூடாது - என்றார். (ஐ)

# இரு வேறிடங்களில் விபத்து சிறுமி உட்பட இருவர் பலி!

கொழும்பு, ஜன. 26

நாட்டின் இருவேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துக்களில் 6 வயது சிறுமியும் இளைஞர் ஒருவரும் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் பரசன்கஸ்வெவ பகுதியில் கம்பிரிகஸ்வெவ பகுதியில் பாடசாலை மாணவர்களை ஏற்றி சென்ற பஸ்ஸிலிருந்து மாணவி ஒருவர் முன்பக்க கதவு ஊடாக தவறி விழுந்துள்ளார்.

இதில், படுகாயமடைந்த 6 வயது சிறுமி அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். விபத்து தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, இரத்தினபுரி - எம்பிலிபிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீதியின் உடகம வீதியில் மோட்டார் சைக்கிள் எதிர்திசையில் வந்த வான் ஒன்றுடன் மோதி விபத்துக்கு உள்ளானது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த 28 வயது இளைஞர் உயிரிழந்தார். விபத்து தொடர்பில் வானின் சாரதி உள்ளிட்ட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# குமார் நடேசனுக்கு பாராட்டு நிகழ்வு!

கொழும்பு, ஜன. 26

இந்திய அரசாங்கத்தால் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு வழங்கப்படும் உயர் விருதான 'பிரவாசி பாரதிய சம்மான்' விருது பெற்ற எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட் முகாமைத்துவப் பணிப்பாளர் குமார் நடேசன் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளார்.

இந்த நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொழும்பு தமிழ் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

மூத்த ஊடகவியலாளரும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய செயல்குழு உறுப்பினருமான அனந்த பாலகிட்ணர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
26.01.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், தை 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# வெளியாருக்கான சிங்கள எதிர்ப்பு?

குணாதாச அமரசேகர தலைமையிலான தேசிய அமைப்புகளின் கூட்டமைப்பு என்னும் அமைப்பு அமெரிக்கத் தூதுவர் இலங்கையின் விவகாரங்களில் தலையீடு செய்யக்கூடாதென்று வலியுறுத்தியிருக்கின்றார். அதாவது, சீனாவுக்கு எதிரான கருத்துகளை அமெரிக்க தூதுவர் பரப்பிக் கொண்டிருப்பதாகவும், அதனை நிறுத்த வேண்டும் என்றும் குறித்த அமைப்பு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

சிங்கள தேசியவாதிகள் (அப்படி தங்களை காண்பித்துக் கொள்பவர்கள்) பொதுவாக மேற்குலக மற்றும் இந்திய எதிர்ப்புக் கோஷங்களை முன்வைப்பது உண்டு. சில தென்னிலங்கை கட்சிகள் இதனை ஓர் அரசியல் முதலீடாகவும் பயன்படுத்தி வருகின்றன. இவ்வாறான குழுக்கள் அனைவருமே இதுவரையில் ராஜபக்ஷக்களோடுதான் அணி சேர்ந்திருந்தனர். ஆனால், இதிலுள்ள வேடிக்கையான விடயம் என்னவென்றால் ராஜபக்ஷ சகோதரர்களில் மூவர் அமெரிக்க குடியுரிமை பெற்றிருப்பவர்கள். விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது அதற்கு தலைமை தாங்கிய கோட்டாபய ராஜபக்ஷ ஓர் அமெரிக்கர்.

2020 வரையில் அவர் ஓர் அமெரிக்கராகவே இருந்தார். ஒருவேளை 19ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் இரட்டை குடியுரிமை விவகாரம் தடுக்கப்படாவிட்டால் கோட்டாபய ராஜபக்ஷ அவரின் அமெரிக்க குடியுரிமையை கைவிட்டிருக்க மாட்டார். மொட்டு கட்சியை கட்டியெழுப்பிய பஸில் ராஜபக்ஷ ஓர் அமெரிக்கர். அமெரிக்க குடியுரிமையை கொண்டிருப்பவர்களின் தலைமையின் கீழிருந்து கொண்டே அமெரிக்க எதிர்ப்பை வெளியிடும் அதியசமான அரசியல்வாதிகள் தென்னிலங்கையில்தான் இருக்கின்றனர். சிங்களவர்கள் மத்தியில் காணப்படும் அறியாமைகளை தங்களின் சுகபோகங்களுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

வெளியாரின் உதவிகளின்றி, விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை இராணுவம் ஒருபோதுமே வெற்றிபெற்றிருக்க முடியாது. குறிப்பாக, மேற்குலக நாடுகள் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக தடை செய்தது. அமெரிக்கா 1997இல் தடைசெய்தது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கனடா 2006இல் தடை செய்தது. மேற்குல தடைகள் விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தின.

விடுதலைப் புலிகள் அமைப்பு மேற்குலகால் தனிமைப்படுத்தப்பட்ட சூழலில்தான் இலங்கை இராணுவத்தினரால் வெற்றிபெற முடிந்தது. இந்தியாவின் பங்கு பெரியளவில் இருக்கவில்லை. ஏனெனில், இந்தியா 1991களிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்துவிட்டது. இந்தியாவின் தடைக்குப் பின்னர்தான் விடுதலைப் புலிகள் மேற்குலகத்தை நோக்கி நகர்ந்தனர். மேற்குலக ஜனநயாக சூழலைப் பயன்படுத்தியே புலிகள் அமைப்பு பெருமளவில் வளர்சியடைந்தது. ஆனால், ஒரு கட்டத்தில் மேற்குலகம் விடுதலைப் புலிகளை சுற்றிவளைத்து தனிமைப்படுத்தியது. ஏற்கனவே, இந்தியாவின் ஆதரவை இழந்திருந்த விடுதலைப் புலிகள் அமைப்பு மேற்குலகத்தின் ஆதரவையும் முற்றிலுமாக இழந்தது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ராஜபக்ஷக்களின் வெற்றியின் பின்னால் மேற்குலகின் ஆதரவிருந்தது. ஆனால், சிங்கள தேசியவாதிகளாக தங்களை காட்சிப்படுத்திக் கொள்பவர்களோ அவப்போது அமெரிக்காவுக்கு எதிராகவும் மேற்குலகுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்புவது வேடிக்கையானது. இன்னும் வேடிக்கையானது பதவியிழந்த கோட்டாபய ராஜபக்ஷவோ அமெரிக்காவில் தஞ்சமடைவதற்காகக் கடுமையாக முயற்சித்துக் கொண்டிருக்கின்றார். இதுதான் ராஜபக்ஷக்களின் சிங்கள தேசியவாதம். ஆனால், இந்த போலிவாதத்திலிருந்து சிங்களவர்களை விடுவிப்பதற்கு தென்னிலங்கையில் சரியான அரசியல்வாதிகள் இல்லை.

# மேயராக ஆர்னோல்ட் தெரிவான வழக்கு; எதிராளிகளை முன்னிலையாக உத்தரவு

*யாழ்ப்பாணம், ஜன. 26*

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் தெரிவு சட்டவிரோதமானது என்று அறிவிக்குமாறு கோரிய வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. அன்றைய தினம் எதிராளிகளை நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் வரதராஜா பார்த்தீபன் சார்பில் சட்டத்தரணியும் முன்னாள் முதல்வருமான வி. மணிவண்ணன் இந்த வழக்கை மேல் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

நேற்றையதினம் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

இதைத் தொடர்ந்து வழக்கில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்ட 48 பேருக்கும் அழைப்பாணை அனுப்பவும் உத்தரவிடப்பட்டது. அத்துடன், எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன், அன்றைய தினம் மன்றில் அவர்களை முன்னிலையாகவும் உத்தரவிடப்பட்டது.

யாழ். மாநகர முதல்வராக இருந்த வி. மணிவண்ணன் வரவு - செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டமையை தொடர்ந்து டிசெம்பர் 31ஆம் திகதியுடன் பதவி விலகினார்.

இதைத் தொடர்ந்து, கடந்த 19ஆம் திகதி முதல்வர் தெரிவு நடத்தப்பட்டது. முதல்வராக போட்டியிடும் இ. ஆர்னோல்ட்டின் பெயர் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்டளவான உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். இதையடுத்து கோரம் இல்லை என்று தெரிவித்து உறுப்பினர் தெரிவு நடைபெறவில்லை.

ஆனால், வர்த்தமானி மூலமாக ஆர்னோல்ட் முதல்வராக அறிவிக்கப்பட்டார். இதையடுத்து, கடந்த 21ஆம் திகதி அவர் முதல்வராக பதவியேற்றார்.

அவரின் பதவியேற்புக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ். மாநகர சபை உறுப்பினர் பார்த்தீபன் வழக்கு தொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வல்வெட்டித்துறை மருத்துவமனைக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் மருந்துகள்!

*வடமராட்சி, ஜன. 26*

வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனையின் கோரிக்கைக்கு அமைவாக குழந்தைகளுக்கான மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய மருந்து வகைகளை தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் மருத்துவமனையின் அத்தியட்சகர் மருத்துவர் வே. கமலநாதனிடம் கையளித்தார். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த உதவி திட்டம் வழங்கப்பட்டது.

இதேவேளை, விபத்து ஒன்றில் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட நீர்வேலியைச் சேர்ந்த க. மதுசன் என்பவருக்கு சிகிச்சைக்காக ஒரு இலட்சம் ரூபாய் நிதியும் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய முன்னாள் அதிபரின் பாராட்டு விழாவுக்காக 25 ஆயிரம் ரூபாய் நிதியும், அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் வைரவிழாவை முன்னிட்டு பரிசளிப்பு நிகழ்வுக்காக 30 ஆயிரம் ரூபாய் நிதியும் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டன. (ஐ-02)

# 20 வர்த்தகர்களுக்கு ரூ. 5 இலட்சம் தண்டம்!

*யாழ்ப்பாணம், ஜன. 26*

காலாவதியான மற்றும் பழுதடைந்த உணவுப் பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த 20 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு 5 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட வர்த்தக நிலையங்களுக்கே இவ்வாறு தண்டப் பணம் விதிக்கப்பட்டது.

மாநகர எல்லைக்குள் உள்ள பல்பொருள் விற்பனை நிலையங்கள் கடந்த டிசெம்பர் 11, 12, மற்றும் இந்த மாதத்தில் கடந்த 17, 18ஆம் திகதிகளில் சுகாதார பரிசோதகர்களால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது திகதி காலாவதியான உணவுப் பொருட்கள், பழுதடைந்த உணவு பொருட்கள், உரிய முறையில் பொதியிடப்படாத உணவு பொருட்கள் என 20 விற்பனை நிலையங்களில் பாவனைக்கு உதவாத பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டது. நேற்று நடந்த விசாரணையில் உரிமையாளர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். இதையடுத்து அவர்களுக்கு 5 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ)

# சொற்பொழிவு


*யாழ்ப்பாணம், ஜன. 26*

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்பு சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை இளம் சைவப் புலவர் இளம்சைவப்புலவர் க. கயலைவாசன் ‘ஆன்மீக எழுச்சியில் ஆலயங்கள்’ என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜனவரி - 26 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - தை 12
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 03.00
திதி : பஞ்சமி




**மேடம்**
பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத வரவால் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் இன்று உங்கள் கைக்கு வரும்.

**இடபம்**
துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். புதிய பொறுப்புகள் தேடி வரும். பணிபுரியும் இடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். தடைபட்டிருந்த செயலில் வெற்றி உண்டாகும்.

**மிதுனம்**
உங்கள் முயற்சியில் கவனமுடன் செயல்படுங்கள். ஆதாயம் அதிகரிக்கும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். உங்கள் செயல்களில் அவசரம் வேண்டாம். தாழில் புரியும் இடத்தில் நிதானம் தேவை.

**கடகம்**
உங்களை சோர்வடையச் செய்யும் வகையில் ஒரு சிலரின் நடவடிக்கை இருக்கும். தேவை இல்லாமல் மற்றவர் விஷயத்தில் தலையிட வேண்டாம். சிறுசிறு பிரச்னை ஏற்படும்.

**சிம்மம்**
சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்தவற்றில் லாபம் காண்பீர்கள். பிரச்னைகளை சமாளிப்பீர்கள். உறவினர் ஆதரவால் உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**கன்னி**
சோர்வு விலகி உற்சாகமாக செயல்படு வீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடம் காணாமல் போகும். உங்கள் செயல்களுக்கு பெரியோரின் ஆதரவு கிடைக்கும். அதிரடியாக செயல்படுவீர்கள்.

**துலாம்**
நினைத்தது ஒன்று நடப்பது ஒன்றாக இருக்கும். எதிர்பார்த்த வற்றில் ஏமாற்றம் உண்டாகும். வார்த்தைகளில் கவனம் தேவை. உங்கள் முயற்சிகளில் சிரமம் காண்பீர்.

**விருட்சிகம்**
பணி இடத்தில் கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். உங்கள் செயல் காரணமாக மற்றவர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய நிலை உண்டாகும். வேலை பளு அதிகரிக்கும். எதிர்பார்த்தவற்றில் அனுகூலம் காணமுடியாமல் போகும்.

**தனுசு**
தடைபட்டிருந்த வருவாய் இன்று உங்கள் கைக்கு வரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். முயற்சியால் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் தனித்திறமை வெளிப்படும்.

**மகரம்**
பண விவகாரத்தில் கவனம் தேவை. புதிய முதலீடு பற்றிய எண்ணம் உண்டாகும். மற்றவரின் நெருக்கடியால் சங்கடங்களுக்கு ஆளாவீர்கள். வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கும்பம்**
மனதில் குழப்பம் உண்டாகும். திட்டமிட்டு செயல்படுவதில் சங்கடம் குறையும். குழப்பங்களைத் தவிர்ப்பதால் உங்கள் முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும் நாள். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்**
வெளியூர் பயணங்களால் சங்கடம் சந்திப்பீர்கள். செலவிற்கு தகுந்த வரவு வரும். எதிர்பாராத பிரச்னைகளால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். மருத்துவச் செலவு ஏற்படும். எதிர்பாராத செலவு ஏற்படும். குடும்பத்தினர் வற்புறுத்தலால் சங்கடம் ஏற்படும்.

### ஈரோடு இடைத் தேர்தல்:

# தி. மு. க. கூட்டணிக்கு கமல் நிபந்தனையற்ற ஆதரவு!

சென்னை, ஜன. 26

ஈரோடு இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவனுக்கு நிபந்தனைகளற்ற ஆதரவு அளிப்போம் என மக்கள் நீதி மய்ய தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்த அறிக்கையில்,

ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் மத சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பாக போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவனை ஆதரிப்பது எனும் முடிவை மக்கள் நீதி மய்யம் கட்சியின் நிர்வாக குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் ஆமோதித்தது மகிழ்ச்சியளிக்கிறது. அவரின் வெற்றிக்காக நானும், எனது கட்சியினரும் உதவிகளை செய்வோம் என்றும் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட வாழ்வில் ஏற்பட்ட தனது சொந்த தயரத்தையும் மீறி மக்கள் பணி செய்ய மீண்டும் தேர்தல் களத்தில் இருக்கும் ஈ. வி. கே. எஸ். இளங்கோவனை பாராட்டுவதாகவும், இந்த இடைத்தேர்தலில் மத சார்ப்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளருக்கு மக்கள் நீதி மய்யம் நிபந்தனைகளற்ற ஆதரவை அளிப்பது என முடிவு செய்துள்ளதாக கூறியுள்ளார்.

இந்தியாவின் பன்மைத்துவமும், இறையாண்மையும் தொடர்ந்து நெருக்கடிக்கு உள்ளாகிறது. மொத்த தேசத்தையும் ஒற்றை பண்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்று துடிக்கிறார்கள். மக்களின் உணவு, உடை, மொழி, கலாச்சாரம் என ஒவ்வொன்றுக்குள்ளும் ஊடுருவ முயற்சிக்கிறார்கள் என கூறியுள்ளார்.

நாம் அனைவரும் ஒருங்கிணைந்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் ஈ. வி. கே. எஸ். இளங்கோவனை வெற்றி பெறச் செய்து மதவாத சக்திகளுக்கு பாடம் புகட்ட வேண்டும் - என்று கூறியுள்ளார்.

(ஐ)

# சார்ஜாவில் உலக தமிழ் மாநாடு தமிழக முதல்வருக்கு அழைப்பு!

சென்னை, ஜன. 26

சார்ஜாவில் நடைபெறவுள்ள 11ஆவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள முதலமைச்சர் மு. க. ஸ்டாலினுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தனிநாயகம் அடிகள் உள்ளிட்ட தமிழறிஞர்களின் முயற்சியால் டெல்லியில் 1964இல் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் உருவானது. உலகத் தமிழறிஞர்களை ஒன்றிணைத்து அவர்களின் ஆராய்ச்சிகளை உலகறிய செய்யும் வகையில், இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகத் தமிழ் மாநாடு நடத்தவும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தொடங்கிய போது திட்டமிடப்பட்டு, உலகத்தமிழ் மாநாடுகள் நடத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தால் இது வரை 10 மாநாடுகள் நடத்தப்பட்டு உள்ளன. 10ஆவது உலக தமிழ் மாநாடு அமெரிக்காவில் நடைபெற்றது. இதன்பிறகு கொரோனா பரவல் காரணமாக 11வது உலக தமிழ் மாநாடு நடைபெறுவதில் சிக்கல் ஏற்பட்டது.

இதையடுத்து 11வது உலகத் தமிழ் மாநாடு ஜூலையில் சார்ஜாவில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தால் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டின் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து 3 நாட்கள் நடைபெறவுள்ள மாநாட்டில் 100 நாடுகளைச் சேர்ந்த சுமார் 2,500 தமிழறிஞர்கள், இலட்சக் கணக்கான பார்வையாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

# 2047இல் உலகின் தலைமை நாடாக இந்தியா இருக்கும்!

## தமிழக ஆளுநர்

சென்னை, ஜன. 26

இந்தியா முன்னேறி வரும் நாடாக இருக்கிறது என்றும், 2047ஆம் ஆண்டில் இந்தியா உலகின் தலைமை நாடாக இருக்கும் என்றும் ஆளுநர் ஆர். என். ரவி கணித்துள்ளார்.

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு நடந்த நகிழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

“இந்தியா முன்னேறி வரும் நாடாக இருக்கிறது. 2047ஆம் ஆண்டில் இந்தியா, உலகின் தலைமை நாடாக இருக்கும்.

வாக்குச் சீட்டு முறையில் இருந்து முன்னேறி இ. வி. எம் இயந்திரங்கள் வந்துள்ளன. கடந்த சில தேர்தல்களில் பெண்களின் பங்களிப்பு அதிகமாக உள்ளது. பெண் வாக்காளர்கள் அதிகம் வாக்களித்துள்ளனர். பெண்கள், யார் ஆட்சிக்கு வர வேண்டும் என சுதந்திரமாக முடிவு எடுக்கிறார்கள். தமிழகத்தில் 1.8 கோடி புது வாக்காளர்கள் உள்ளனர். அவர்களுக்கு சமூகத்தின் மீது அக்கறை உள்ளது. அவர்களின் எண்ணங்களை, எதிர்பார்ப்புகளை, பூர்த்தி செய்யக் கூடியவர்களை தேர்வு செய்வார்கள். வாழ்க தமிழ்நாடு வளர்க பாரதம்!” - என்றார்.

(ஐ)

# 2024 பாராளுமன்ற தேர்தலில் என் ஆட்டத்தை பாருங்கள்!

## நாம் தமிழர் சீமான்



சென்னை, ஜன. 26

நாளுக்கு நாள் நாம் தமிழர் கட்சி வளர்ந்து கொண்டு தான் இருக்கிறது என சீமான் கூறியுள்ளார்.

ஈரோடு கிழக்குத் தொகுதிக்கு வரும் வரும் பெப்ரவரி 27ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

அதில் தி. மு. க. கூட்டணி சார்பாக காங்கிரஸ், அ. தி. மு.க சார்பில் ஓ. பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி அணிகள். நாம் தமிழர் கட்சி என்பன போட்டியிடுகின்றன.

ஈரோடு தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்து போட்டியிடும். நாளுக்கு நாள் நாம் தமிழர் கட்சி வளர்ந்து கொண்டு தான் இருக்கிறது. ஈரோடு கிழக்கு தொகுதியில் 30வீதம் ஆதிகுடி மக்கள் சிறுபான்மையினர் உள்ளனர்.

நாம் தமிழர் கட்சி கண்டிப்பாக வெற்றி பெறும். அரவிந்த் கெஜ்ரிவாலால் முடிகிறது என்றால் சீமானால் முடியாதா? 2024 மக்களவைத் தேர்தல்ல என்னோட ஆட்டத்தை பாருங்க - என்றார்.



# கரு ஜயசூரியவுக்கு உயர் தேசிய விருது!

கொழும்பு, ஜன. 26

சுதந்திர தினத்தை முன்னிட்டு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு இலங்கையின் உயரிய தேசிய விருதான சிறி லங்காபிமன்ய விருது வழங்கப்படவுள்ளது.

இந்த மதிப்புமிக்க விருதை எட்டாவது நபர் என்ற பெருமையை 82 வயதான முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய பெற்றுள்ளார்.

1986 இல் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச இந்த விருதினை முதன்முதலிலும் 2017 ஆம் ஆண்டு டபிள்யூ.டி. அமரதேவ இறுதியாகவும் இந்த விருதினைப் பெற்றிருந்தனர்.

பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விருதை கரு ஜயசூரியவிற்கு வழங்கவுள்ளார்.

2018 ஆம் ஆண்டு அரசியலமைப்பு நெருக்கடி சந்தர்ப்பத்தில் முக்கிய பங்கு வகித்தமைக்காக இந்த விருது வழங்கப்படவுள்ளது.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிடாமல் பொதுப் பதவியிலிருந்து விலகி சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தை ஸ்தாபித்தமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் நடவடிக்கைகளுக்கு போதியளவு உதவி வழங்குக!

## மத்திய வங்கி ஆளுநரிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 26

தேர்தல் நடவடிக்கைகளுக்கு போதியளவு உதவிகளை வழங்குமாறு கோரி மத்திய வங்கி ஆளுநருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

எரிபொருள் மற்றும் மின்சாரத்தை தொடர்ச்சியாக வழங்குவதற்கு இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு தேவையான பணத்தை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா கோரிக்கை விடுத்துள்ளார்.

உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், இதுதொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்படும் எனவும் அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவு சிறுகதைப் போட்டி



மறைந்த எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவாக ஆண்டுதோறும் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் மிகச்சிறந்த சிறுகதை ஒன்றைத் தெரிவுசெய்து பரிசளிக்க காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை தீர்மானித்திருக்கின்றது. 2022ம் ஆண்டு வெளிவந்த சிறுகதைகள் இந்த தெரிவில் இடம்பெறவிருக்கின்றன. அவ்வாறு முதல்தடவையாக 2022ல் வெளிந்த உங்கள் சிறுகதைகளின் பிரதியை அனுப்பிவையுங்கள்.

அதனோடு இணைந்ததாக புதிதாக எழுதப்பட்ட (இதுவரை வெளிவராது) சிறுகதைகளில் மூன்று சிறுகதைகளை தெரிவுசெய்து பரிசு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளை அனுப்பிவைக்கலாம்.

**சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை**
**707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஊடக அனுசரணை: ஈழநாடு

# மக்கள் நிராகரித்த ‘மொட்டு’வுடன் யானை கூட்டு சேருவது வேடிக்கை!

## கூறுகின்றார் கஜேந்திரகுமார்



கொழும்பு, ஜன. 26

**மக்களால் நிராகரிக்கப்பட்ட மொட்டுடன் யானை கூட்டு சேருவது வேடிக்கையான விடயம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

நேற்று யாழ்ப்பாண அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கில் உள்ள நிலைமை போல் தான் தெற்கிலும் நிலைமை இருக்கும் வடக்கில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர மற்றைய அனைத்து தரப்புகளும் மக்கள் மட்டத்தில் செல்வாக்கை இழந்துகொண்டு போகின்ற கட்டத்தில் உள்ளன.

யானை தேர்தல் காலத்திலே முற்று முழுதாக தூக்கி எறியப்பட்ட நிலையிலே அவர்கள் கூட்டு சேர்ந்தால் மக்கள் செல்வாக்கு எடுக்கலாமென்று நினைக்கிறார்கள். யதார்த்தத்திற்கு முரணாண வகையிலே சிந்தித்து வெற்றி பெறலாம் என்று நினைத்து ஏதோ நடவடிக்கை எடுப்பதாக நினைக்கின்றார்கள்.

தெற்கில் ராஜபக்ஷக்களுக்கு மக்கள் மத்தியில் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்க மஹிந்த ராஜபக்ஷவை கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதனால் தான் தப்பித்துக் கொள்ளலாம் என நினைப்பது ஒரு வேடிக்கையான விடயமாகவே காணப்படுகின்றது.

ஒட்டுமொத்தமாக உலகமே நிராகரிக்கின்ற கடந்த தேர்தலிலே மூன்றில் இரண்டு பெரும்பான்மை எடுத்தற்காக மொட்டுடன் யானை கூட்டு சேருவது என்பது வேடிக்கையான விடயமாகும் - என்றார். (அ)

# மொட்டுக்கு வாக்களிப்பதை தவிர மக்களுக்கு மாற்று வழி கிடையாது

## சாகர காரியவசம் கூறுகின்றார்



கொழும்பு, ஜன. 26

மொட்டுச் சின்னத்துக்கு வாக்களிப்பதை தவிர மக்களுக்கு மாற்று வழிமுறை ஏதும் கிடையாது என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யார் நாட்டுக்கு சேவையாற்றினார்கள், யார் நாட்டை சீரழித்தார்கள் என்பதை இருமுறை சிந்தித்து மக்கள் வாக்களிக்க வேண்டும்.

பொதுஜன பெரமுன ஜனநாயகம் மற்றும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு மதிப்பளித்து செயற்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொதுஜன பெரமுன மாறுப்பட்ட பொதுச் சின்னத்தில் போட்டியிடும்.

பொதுஜன பெரமுன நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை.

ஆகவே மக்களுக்கு மாற்று வழியேதும் கிடையாது.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெறும் - என்றார். (அ)

# தேர்தலுக்கு தயாராகுங்கள்!

## ஐ.தே.கவினரிடம் கூறினார் ரணில்

கொழும்பு, ஜன. 26

தேர்தலுக்கு தயாராகுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்களிடம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கோரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு கட்சி உறுப்பினர்களிடம் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார் என கட்சியின் பொதுச் செயலாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவ சபை கூட்டம், நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே இந்த விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கோட்டாவை வெளியேற்ற சதித்திட்டம் தீட்டப்பட்டது

## சாகர காரியவசம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 26

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெளியேற்ற சதித் திட்டம் தீட்டப்பட்டதாகவும், அப்போது அமைச்சர்கள் சிலரும் இதில் ஈடுபட்டனர் எனவும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அதனை மக்கள் தற்போது தெளிவாக உணர்ந்துள்ளதாகவும், எதிர் காலத்தில் இவ்வாறான நபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சாகர காரியவசம் கூறினார்.

எவ்வாறாயினும், தமக்கு எதிராக சதித்திட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளதாகவும் அதனால்தான் அவர் வெளியேற வேண்டியிருந்தது என்றும் கோட்டாபய ஒப்புக் கொள்ளத் தயங்குகிறார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் தட்டுப்பாட்டு காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் அளவே தற்போதும் இறக்குமதி செய்யப்படுவதாகவும் ஆனால் தற்போது எவ்வித பற்றாக்குறையும் இல்லை என்றும் சாகர காரியவசம் கூறினார். (அ)

# புதிய கூட்டணிகளால் இந்த தேர்தலில் சவால்

## ஏற்றுக்கொள்கிறார் பஸில்




**கொழும்பு, ஜன. 26**

**“புதிய கூட்டணிகள் உருவாகியுள்ளமை தேர்தலில் சவாலாக அமையும். எனினும், சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வல்லமை எமது கட்சிக்கு உள்ளது.” _ என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரும், தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.**

கண்டி, தலதாமாளிகைக்கு நேற்று முன் தினம் பயணம் மேற்கொண்ட பஸில், வழிபாடுகளில் ஈடுபட்டார்.

தேர்தல் பிரசாரத்தை வெற்றிகரமாக ஆரம்பிக்கும் நோக்கிலேயே வரலாற்று சிறப்புமிக்க தலதாமாளிகையில் அவர் வழிபாடுகளில் ஈடுபட்டார் எனக் கூறப்படுகின்றது.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட பஸில் ராஜபக்ஷ,

“252 சபைகளுக்கு பொதுஜன பெரமுன மொட்டு சின்னத்தில் போட்டியிடுகின்றது.

தேர்தல் முடிவு எவ்வாறு அமையுமென கூறமுடியாது. அது மக்களின் கையில்தான் உள்ளது.” - என்றார்.

(அ)

# ஊழியர்களுக்கு வாரந்தோறும் ஊதியம் வழங்க யோசனை

*கொழும்பு, ஜன. 26*

வாரந்தோறும் மாதாந்த சம்பளம் வழங்குவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்படவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில யோசனை ஒன்றை முன்வைக்கிறார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர், இவ்வாறு செய்வதன் மூலம் ஒரேயடியாக பாரிய தொகையை கண்டுபிடிக்கும் சவாலுக்கு அரசாங்கம் முகம் கொடுக்கவேண்டியதில்லை.

மேலும் சம்பளம் வழங்குபவரும், சம்பளம் வாங்குபவரும் கடனில் சிக்காமல் இருப்பார்கள் என்றார்.

வாரச் சம்பளம் வாங்கும் போது அந்த வாரச் செலவுகள் தான் இருக்கும். கடைசி வாரத்தில் பணம் செலவழிச்சு, கடன் வாங்க வேண்டியதில்லை. மேலும், பெரிய தொகையைக் கண்டுபிடிக்க அரசாங்கமோ, தனியாரோ சிக்கத் தேவையும் இல்லை.

ஒரே நேரத்தில் பணம். கூலி செய்பவர் மற்றும் கூலி கொடுப்பவர் இருவரும் கடன் வலையில் சிக்கிக் கொள்ளும் அபாயத்தில் இருந்து விடுபடுவார்கள். வாரம் வாரம் கூலி கொடுப்பது ஒரு நிம்மதி. மேலும், உலகின் பல நாடுகளில், வாரந்தோறும் அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை சம்பளம் செலுத்தப்படுகிறது - என்று தெரிவித்தார்.

(அ)

# தேர்தலைத் திட்டமிட்டவாறு நடத்தாவிடின் மக்கள் அனைவரும் வீதியில் இறங்குவார்கள்

## சரத் பொன்சேகா எச்சரிக்கை

*கொழும்பு, ஜன. 26*

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி நடத்தவிடாமல் அதனை அரசாங்கம் ஒத்திவைத்தால் மக்கள் போராட்டம் நாடெங்கும் வெடிக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த அரசாங்கத்திற்கு தலைமை தாங்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதுகெலும்பு இல்லாதவர்.

அரசாங்கத்திற்கு தோல்வி ஏற்படும் என்ற அச்சம் காரணமாகவே உளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க அவர் முயற்சிக்கின்றார்.

தேர்தலைத் திட்டமிட்ட திகதியில் நடத்தாவிடின் மக்கள் அனைவரும் வீதியில் இறங்குவார்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் போல் ரணில் விக்கிரமசிங்கவும் வீட்டுக்கு ஓட ஓட விரட்டியடிக்கப்படுவார்.

முப்படையினரைப் பயன்படுத்தி மக்கள் போராட்டத்தை அடக்கலாம் என ரணில் விக்கிரமசிங்க எண்ணுவாரானால் அதைவிட முட்டாள்தனம் வேறு ஒன்றும் இல்லை - என்றார். (அ)

# வசந்த முதலிகேயை விடுதலை செய்க!

## நுவரெலியாவில் கையெழுத்து போராட்டம்

*கொழும்பு, ஜன. 26*

கைது செய்யப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேயை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என கோரி நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியாவில் “கோட்டா கோ கம” கிளை இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சில சிவில் அமைப்புகள் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த கையொப்பம் இடும் நடவடிக்கையில் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா தொகுதி அமைப்பாளர் திணேஷ் கிருசாந்த நுவரெலியா மாநகர சபை தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு கையொப்பமிட்டனர். (அ)

# தேர்தலை நடத்துவது என்பது எம்முடன் தொடர்புடையதல்ல

## கூறுகிறார் நந்தலால் வீரசிங்க

*கொழும்பு, ஜன. 26*

இந்த நேரத்தில் தேர்தலை நடத்துவது ஏற்புடையதா? இல்லையா? இது மத்திய வங்கியுடன் தொடர்புடைய விடயம் அல்ல என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலை நடத்துவது ஏற்புடையதா இல்லையா என்பது பற்றி நாங்கள் கருத்து கூற விரும்பவில்லை. அது எமக்கு சம்மந்தமில்லை. மத்திய வங்கியானது நாட்டின் நிதிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் என்பது முக்கிய காரணம். தேர்தல் எமது சட்டகத்திற்கு புறம்பானது.

தேர்தல் ஆணையாளர் எனக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார். குறிப்பாக வரிசையில் நிற்கும்போது, அத்தியாவசியப் பொருட்களுக்கு முன்னுரிமை கொடுப்பதுதான் முக்கியம்.

டிசெம்பர் முதல் அந்நியச் செலாவணி வரவில் வளர்ச்சி ஏற்பட்டதால், தலையிட்டு அன்னியச் செலாவணியை வழங்குவதற்குப் பதிலாக, எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்குத் தேவையான பணத்தைப் பெற வங்கியிடம் இப்போது இருப்பு இருப்பதாக நாங்கள் கூறியுள்ளோம்.

கிடைக்க முடியாவிட்டால், இருப்பதில் இருந்து கொடுப்போம். அந்த வழியில் தான் இப்போது போகிறோம். இப்போது அந்நியச் செலாவணியைப் பொறுத்தவரை வங்கி அமைப்பில் பெரிய பற்றாக்குறை இல்லை. சந்தையில் பணம் இருக்கிறது.

தேர்தல் நாணய நிதிய செயல்முறையை பாதிக்கிறதா என்று சொல்ல நான் நிபுணர் இல்லை. நாணய நிதியம் மூலம் இதுபோன்ற சிக்கலான திட்டத்தை செயல்படுத்தும்போது, கடினமான கொள்கைகள் மற்றும் முடிவுகள் யாராக இருந்தாலும், அது செயல்படுத்தப்பட வேண்டும் என்பதை எங்கள் தரப்பில் இருந்து பார்க்கிறோம்.

இதுபோன்ற பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபட, வலிமிகுந்த கொள்கையை நாம் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். தற்போதைய செயல்முறை மிகவும் வெற்றிகரமாக உள்ளது மற்றும் முன்னேறியுள்ளது. இது தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

வரிக் கொள்கையானது நிதிக் கொள்கைக்கு உட்பட்டது. மத்திய வங்கி நாட்டின் நிதிக் கொள்கையாக செயல்படுகிறது. அரசின் நிதிக் கொள்கை நாட்டின் நிதிக் கொள்கையுடன் ஒன்றாகச் செல்ல வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம் - என்றார்.

(அ)

# சீன தூதரகத்தின் கடித தலைப்பை பயன்படுத்தி கடன் மறுசீரமைப்பு தொடர்பில் போலிக் கடிதம்!

## சீன தூதரகம் விளக்கம்

*கொழும்பு, ஜன. 26*

கடன் மறுசீரமைப்பு தொடர்பாக இலங்கையின் ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சருக்கு சீன தூதரகத்தின் உத்தியோகபூர்வ கடிதத் தலைப்பைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களில் வெளியான கடிதம் போலியானது என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட குறித்த கடிதத்தில் இருதரப்பு , வணிகக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 5 ஆண்டு கால அவகாசத்தை வழங்குவதன் மூலம் திருப்பிச் செலுத்தும் அட்டவணையைத் தளர்த்த சீனா தயாராக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை மறுத்துள்ள சீனத் தூதரகம், தனது உத்தியோகபூர்வ கடிதத் தலைப்பின் கீழ், இலங்கை ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சருக்கு எழுதப்பட்ட சமூக ஊடகங்களில் பரவும் கடிதம் முற்றிலும் போலியானது என்றும் தெரிவித்துள்ளது.

எனவே உத்தியோகபூர்வ தகவல் ஆதாரங்களை மட்டுமே பின்பற்றுமாறு தூதரகம் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதியுதவி பெறும் முயற்சியில் இலங்கை தனது சர்வதேச கடன் வழங்குனர்களிடம் கடன் மறுசீரமைப்புக்கான பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்து வரும் நிலையில் இவ்வாறான இந்த போலி கடிதம் பகிரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வெளிநாட்டு இலங்கையருக்கு வீடு விற்றதால் 5 இலட்சம் டொலர்களுக்கு மேல் வருமானம்!

*கொழும்பு, ஜன. 26*

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களுக்கான நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நடுத்தர வர்க்க வீடு விற்பனை திட்டத்தின் மூலம், இதுவரை 502,170 அமெரிக்க டொலர்கள் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது இலங்கை நாணய பெறுமதியில் 181 மில்லியன் ரூபாவாகும்.

டுபாயில் பெப்ப்ரவரி 11 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தின விழா கொண்டாட்டத்தின்போது சர்வதேச அளவில் இத்திட்டத்துக்கான விளம்பரம் நடைபெற உள்ளது.

இவ்வருடம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான நடுத்தர வர்க்க வீடுகளை வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு விற்பனை செய்வதன் மூலம் 2 மில்லியன் டொலர் வருமானம் எதிர்பார்க்கப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தற்போது நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ள கொழும்பு “ஹார்பர் பீச் ரெசிடென்ஸ்” வீடமைப்புத் திட்டத்தையும் இந்த அதிகாரசபை இந்த திட்டத்திற்காக ஒதுக்கவுள்ளது.

400 வீடுகள் கொண்ட இந்த வீடமைப்பு திட்டத்தில் ஒரு வீட்டை வாங்க, 40,000 டெலர்கள் செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உயர்தர பரீட்சை காலத்தில் தொடர் மின் விநியோகம்!

## மனித உரிமை ஆணைக்குழுவிடம் அதிகாரிகள் உறுதி

கொழும்பு, ஜன.26

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை காலத்தில் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தொடர்ச்சியான மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சக்தி, வலுசக்தி அமைச்சு, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுதாபனம் ஆகியவற்றின் அதிகாரிகள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

உயர்தர பரீட்சை முடிவடையும் வரை தடையின்றி மின்சாரத்தை வழங்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, உரிய தரப்பிடம் கோரியுள்ளது.

இதற்கு, உரிய தரப்பினர் இணங்கியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இதன்படி, நேற்று முதல் எதிர்வரும் பெப்ரவரி 17 ஆம் திகதி வரை தடையின்றி மின்சாரம் விநியோகிக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம், உரிய தரப்பினர் இணங்கியுள்ளனர். (அ)

# செட்டிகுள விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, ஜன.26

வவுனியா செட்டிகுளம் தட்டாங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

செட்டிகுளம் பகுதியில் இருந்து பூவரசங்குளம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர் தட்டாங்குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்துகொண்டிருந்த லொறியுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த நபர் உடனடியாக மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

சம்பவத்தில் ரங்கெத்கம பகுதியை சேர்ந்த 41 வயதான நந்தன கிருசாந்த என்ற நபரே உயிரிழந்தார்.

விபத்து தொடர்பான விசராணைகளை செட்டிகுளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# 45 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறுவோருக்கு வரி!

## சர்வதேச நாணய நிதியம் பரிந்துரை

கொழும்பு, ஜன.26

மாதாந்தம் 45,000 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுகின்றவர்களுக்கு வரியை அறவிடுமாறு சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்துக்கு நிபந்தனை விதித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இந்தத் தகவலை நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பில் வைத்து தெரிவித்தார்.

சர்வதேச நாணயநிதியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒப்பந்தம் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை.

என்றாலும், கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தை வெளிப்படுத்தியதாக, அமைச்சர் பந்துல கூறினார்.

ஆனால் அரசாங்கம் 100,000 ரூபாவுக்கும் அதிகமான மாத வருமானத்தைப் பெறுகின்றவர்களுக்கு மாத்திரமே வரி விதிப்பு செய்வது என்ற தீர்மானத்திலிருந்து மாறவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# சட்டவிரோதமாக சந்தை கூடுவோர் மீது நடவடிக்கை!

## காரைநகர் பிரதேச சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 26

காரைநகர் பிரதேச சபை எல்லைக்குள் சட்டவிரோதமான முறையில் சந்தை கூடினால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று காரைநகர் பகுதியில் உள்ள வீதியில் சந்தை கூடியமை தொடர்பில் ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்பில் அவர் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாங்கள் காரைநகர் - சக்கலாவோடையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் உள்ளூர் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான சந்தை தொகுதி ஒன்றை திறந்து வைத்துள்ளோம்.

இதற்கு முன்னர் தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு எடுத்து அந்த சந்தையில் காணியை அமைத்திருந்தோம். ஆனால், தற்போது எமக்கான ஒரு சந்தை கட்டடத் தொகுதியை நாங்கள் திறந்துள்ளோம். ஆகையால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திகளை சக்கலாவோடை சந்தையில் சந்தைப்படுத்தலாம்.

நாங்கள் குத்தகைக்கு எடுத்த தனியாரின் காணியை உரிமையாளரிடம் ஒப்படைக்கவுள்ளோம். எனவே, இனிமேல் அங்கு யாரும் சந்தை கூட முடியாது. அவ்வாறு கூடினால் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அத்துடன், வீதிகளில் சட்டவிரோதமாக கூடும் சந்தைகள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள்.

எனவே, காரைநகர் பகுதி வியாபாரிகள் இனிமேல் மிகுந்த அவதானத்துடன் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

# உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைத்தால் சர்வதேசத்தின் ஆதரவை அரசு இழக்கும்

## சுதந்திரக் கட்சி எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 26

“உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திப்போட்டால் சர்வதேச நாடுகள் இந்த அரசுக்கு எதிராகத் திரும்பும்.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

ஒருவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் அரசால் ஒத்திப்போடக்கூடும் என்பதால்தான் வழக்கு ஒன்றைத் தாக்குதல் செய்துள்ளோம். எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளோம்.

இந்தத் தேர்தல் ஏற்கனவே ஒரு வருடம் ஒத்திப்போடப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் என்ன தீர்ப்பை வழங்கப்போகின்றது என்று பார்ப்போம்.

தேர்தலை ஒத்திப்போட்டால் அது நாட்டில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். வரலாற்றில் தேர்தலை ஒத்திப்போட்டதால் அப்படியான விளைவுகளுக்கு நாம் சந்தித்துள்ளோம். அப்படி நடந்தால் அதன் பொறுப்பை அரசு ஏற்க வேண்டும்.

தேர்தலை ஒத்திப்போட்டால் சர்வதேச நாடுகள் இந்த அரசுக்கு எதிராகத் திரும்பும். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்கும் நிலையில் சர்வதேச நாடுகளைப் பகைத்துக்கொள்வது நல்லதல்ல.

சர்வதேச நாடுகளின் உதவி நிச்சயம் தேவை. உதவி இல்லாமல், தனியாக எம்மால் எழுந்து நிற்க முடியாது. அந்த நாடுகள் கைகொடுக்க வேண்டும்-என்றார். (அ)

# புற்றுநோயாளிகளுக்கு உதவுமாறு மஹரகம மருத்துவமனை கோரிக்கை!

கொழும்பு, ஜன. 26

மஹரகம புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு தேவையான மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அவசர உதவி புரியுமாறு மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் அருண ஜயசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மருந்துப் பொருட்களை வழங்க விரும்புவோர் நன்கொடை பிரிவுக்கு 077 746 8503 என்ற கைபேசி இலக்கத்துக்கு அழைக்கவும். குழந்தைகள் உள்ளிட்ட 800 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு மருந்து தட்டுப்பாடு உள்ளது. எந்தெந்த மருந்துகள் பற்றாக் குறையாக உள்ளன என்பதை மருத்துவமனையின் நன்கொடைப் பிரிவைத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

இந்த பிரிவு நாளாந்தம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை திறந்திருக்கும். இது ஓர் உணர்வு பூர்வமான தருணம். ஆகவே, அனைவரும் இணைந்து மருத்துவமனைக்கு உதவுமாறு கேட்டுகொள்கிறோம் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# சம்பள உயர்வு கேட்டு விமானிகள் விலகல்!

## அமைச்சர் நிமால் சொல்கிறார்

கொழும்பு, ஜன. 26

உலகின் முக்கிய வானூர்தி நிறுவனங்கள் வழங்கும் சம்பளம் போன்று தமக்கும் வழங்குமாறு சிறீ லங்கன் எயர்லைன்ஸ் விமானிகள் கோரிக்கை வைத்து பதவி விலகுகின்றனர் என்று விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கட்டார், எமிரேட்ஸ் போன்ற வானூர்தி நிறுவனங்கள் செலுத்தும் சம்பளத்தை வழங்குவதற்கு அந்த நாடுகள் பலமான பொருளாதார கட்டமைப்பை கொண்டிருக்கின்றன. இலங்கையால், அந்த சம்பள விகிதத்தை செலுத்த முடியாது. இதன் காரணமாக, புதிய அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதிக விமானிகளுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் விமானிகள் பயிற்சிகளை வலுப்படுத்துவது அவசியம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# வாள்வெட்டுடன் தொடர்புள்ளோரை உடனடியாக கைது செய்யவேண்டும்!

## வடக்கு சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் உத்தரவு

கொழும்பு, ஜன. 26

சுன்னாகத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை உடனடியாக கைது செய்யுமாறு வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரட்ண உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சுன்னாகம் பகுதியில் நேற்று முன்தினம் மதியம் சினிமா பாணியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டோரை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ,யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்

இரண்டு குழுக்களுக்கு இடையில் நீண்ட காலமாக இடம் பெற்று வரும் முரண்பாட்டின் காரணமாகவே இந்த வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளை தெரியவந்துள்ளது.



எனினும் பட்டப்பகலில் பொதுமக்கள் பார்த்திருக்க இந்த சம்பவம் இடம்பெற்றதை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே உடனடியாக தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளதோடு தாக்குதல் சம்பந்தமான பூரண அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளதாகவும் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டார். (அ)

# சுவீடனில் குர்ஆன் எரிப்பு:

# கொந்தளிக்கும் இஸ்லாமிய நாடுகள் தலைநகரில் தொடரும் போராட்டம்

சுவீடனில் நடந்த ஒரு போராட்டத்தின்போது இஸ்லாமிய மதத்தில் புனிதமாகக் கருதப்படும் குர்ஆன் பிரதி எரிக்கப்பட்ட சம்பவத்தை துருக்கி கடுமையாக விமர்சித்துள்ளது. மேலும், இது "கேவலமான செயல்" என்றும் குறிப்பிட்டுள்ளது.

இத்தகைய போராட்டங்களை அனுமதிக்கும் சுவீடன் அரசின் முடிவு "முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது" என்று துருக்கி தெரிவித்துள்ளது.

ராஜ்ஜீய மட்டத்தில் துருக்கிக்கும் சுவீடனுக்கும் இடையிலான மோதல் வலுவடைந்து வருகிறது.

போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருமாறு சுவீடனிடம் துருக்கி கோரிக்கை விடுத்துள்ளதுடன், சுவீடனின் பாதுகாப்பு அமைச்சர் பால் ஜான்சனின் துருக்கி பயணத்தையும் ரத்து செய்துள்ளது. இந்த சுற்றுப்பயணம் இப்போது அதன் முக்கியத்துவத்தையும் அர்த்தத்தையும் இழந்துவிட்டதாக துருக்கி அரசு கூறுகிறது.

பால் ஜான்சன் சமூக ஊடக வாயிலாக, "நேற்று நான் ஜெர்மனியின் ராம்ஸ்டீனில் உள்ள அமெரிக்க ராணுவ தளத்தில் துருக்கிய பாதுகாப்பு அமைச்சர் ஹூலுசி அகாரை சந்தித்தேன். அங்காராவில் நடக்கும் சந்திப்பைத் தற்போதைக்கு ஒத்தி வைக்க முடிவு செய்துள்ளோம்," எனத் தெரிவித்துள்ளார்.

மற்றொரு ட்வீட்டில், "துருக்கியுடனான சுவீடனின் உறவு எங்களுக்கு மிகவும் முக்கியமானது. பாதுகாப்பு தொடர்பான பொதுவான பிரச்னைகளைப் பற்றி மீண்டும் பேசுவோம் என்று நம்புகிறோம்," என்று அவர் குறிப்பிட்டார்.

குர்ஆன் கடவுளின் வார்த்தைகள் அடங்கிய நூல் என்று இஸ்லாமியர்கள் நம்புகிறார்கள். அவர்கள் அதைப் புனிதமாகக் கருதுகின்றனர். குர்ஆனை வேண்டுமென்றே சேதப்படுத்துவதையோ அதை அவமதிப்பதையோ அவர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

**ஸ்வீடனுக்கு துருக்கியுடனான உறவு ஏன் முக்கியமானது?**

நேட்டோ ராணுவ கூட்டணியில் சேர்வதற்கு சுவீடன் விரும்புகிறது. ஆனால், நேட்டோ உறுப்பினரான துருக்கி அதற்கு எதிராக உள்ளது.

நேட்டோவில் உறுப்பினராக இருப்பதால், வேறு நாடுகள் அந்தக் கூட்டணியில் இணைவதை துருக்கியால் எதிர்க்கவும் நிறுத்தவும் முடியும்.

ரஷ்யா - யுக்ரேன் போர் தொடங்கிய பிறகு, சுவீடனும் பின்லாந்தும் நேட்டோ உறுப்பினர் ஆவதற்கு விண்ணப்பித்தன.

அதற்கு துருக்கி  ஆட்சேபத்தைத் தொடர்ந்து, சுவிடன் தலைநகரான ஸ்டாக்ஹோமில் துருக்கிக்கு எதிராக வலதுசாரிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.




இந்த ஆர்ப்பாட்டங்களின்போது, தீவிர வலதுசாரி கட்சியான ஸ்ட்ராம் குர்ஸின் தலைவரான ராஸ்மஸ் பலுதன், ஸ்டாக்ஹோமில் உள்ள துருக்கிய தூதரகத்திற்கு வெளியே சனிக்கிழமையன்று குர்ஆன் பிரதியை எரித்தார்.

கடந்த ஆண்டு நேட்டோவில் இணை வதற்கு சுவீடனும் பின்லாந்தும் முன் வைத்த கோரிக்கையை துருக்கி எதிர்த் தது.

நேட்டோவில் சுவீடன் இணைவதை துருக்கி எதிர்க்கவில்லை என்பதை சுவீடன் பாதுகாப்பு அமைச்சரின் துருக்கி விஜயம் சுட்டிக்காட்டும் என்று நம்பப்பட்டது.

குர்திஷ் தொழிலாளர் கட்சி போன்ற ஆயுதமேந்திய குர்திஷ் குழுக்களை ஆதரிப்பதை நிறுத்தி, ஆயுதங்களை விற்பனை செய்வதைத் தடை செய்ய வேண்டும் என்று துருக்கி கூறுகிறது. துருக்கி, ஐரோப்பிய யூனியன் போன்ற பகுதிகளில் குர்திஷ் தொழிலாளர் கட்சி போன்ற குர்திஷ் ஆயுதமேந்திய குழுக்கள் பயங்கரவாத குழுக்களாகக் கருதப்படுகின்றன. ஆனால், சுவீடன், பின்லாந்து போன்ற நோர்டிக் நாடுகளில் அவற்றுக்குத் தடை விதிக்கப்படவில்லை.

குர்திஷ் தொழிலாளர் கட்சியின் சில உறுப்பினர்களுக்கு சுவீடன் இடம் கொடுத்துள்ளதாக துருக்கி கூறுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகளை சுவீடன் மறுத்து வருகிறது.

**விமர்சிக்கும் துருக்கி**

துருக்கி, இஸ்லாமிய பெரும்பான்மை உடைய நாடு. அந்நாட்டின் வெளியுறவு அமைச்சகம் இந்தச் சம்பவத்தை விமர்சித்து ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதில் "தொடர்ச்சியான எச்சரிக்கைகள் இருந்தபோதிலும்" இது நடந்துள்ளது எனத் தெரிவித்தது.

"கருத்து சுதந்திரம் என்ற போர்வையில் முஸ்லிம்களை குறி வைத்து நம்முடைய புனிதமான விஷயங்களை அவமதிக்கும் இந்த முஸ்லிம் விரோத செயலை அனுமதிக்கும் இந்த நடவடிக்கை ஏற்றுக்கொள்ள முடியாதது" என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்லாமோஃபோபியா, இனவெறி, பாகுபாடு ஆகியவை ஐரோப்பாவில் எச்சரிக்கை மணியை அடிக்கும் நிலையை எட்டியுள்ளன என்பதற்கு குர்ஆன் எரிப்பு சம்பவம் மற்றொரு சான்று என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதைச் சமாளிக்க சுவீடன் அரசாங்கம், "தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சுவீடனின் வெளியுறவு அமைச்சர் டொபையாஸ் பில்ஸ்ட்ரோம் இந்தச் சம்பவம் "திகிலூட்டக்கூடியது" எனக் கூறினார். அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், "சுவீடனில் கருத்து சுதந்திரம் உள்ளது. ஆனால் அதற்காக, இங்குள்ள அரசோ அல்லது நானோ ஆர்ப்பாட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட உணர்வுகளை ஆதரிக்கிறோம் என்று அர்த்தமில்லை," என்று பதிவிட்டார்.

**இஸ்லாமிய கூட்டுறவு அமைப்பான ஓ.ஐ.சி.யும் எதிர்ப்பு**

ஓஐசி பொதுச் செயலாளர் ஹிசின் பிரஹிம் தாஹாவும், ஸ்டாக்ஹோமில் உள்ள துருக்கிய தூதரகம் முன்பாக குர்ஆன் எரிக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்துள்ளார். இவையனைத்தும் சுவீடன் அதிகாரிகளின் அனுமதியுடன் நடந்ததாகவும் அந்த அமைப்பு கூறுகிறது.

**பாகிஸ்தான் என்ன சொல்கிறது?**

இந்த விவகாரத்திற்கு, "சுவீடனில் குர்ஆன் எரிப்பு சம்பவத்தை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்" என்று பாகிஸ்தான் தனது கண்டனங்களைத் தெரிவித்துள்ளது.

"இந்த அறிவில்லாத, ஆத்திரமூட்டும் இஸ்லாமிய வெறுப்பு செயல் கோடிக் கணக்கான முஸ்லிம்களின் மத உணர்வுகளைப் புண்படுத்தியுள்ளது. இது போன்ற செயல்களை எந்த வகையிலும் கருத்து சுதந்திரம் என்றோ சட்டபூர்வமான செயல் என்றோ கூற முடியாது. இஸ்லாம் அமைதியின் மதம். இஸ்லாமியர்கள் அனைத்து மதங்களையும் மதிப்பவர்கள். இந்தக் கொள்கையை அனைவரும் மதிக்க வேண்டும்," என்றார்.



இஸ்லாமிய வெறுப்பு, சகிப்புத் தன்மை இல்லாமை, வன்முறையைத் தூண்டும் முயற்சிகளுக்கு எதிராகத் தீர்வு காண முன்வருமாறு மற்ற நாடுகளுக்கு பாகிஸ்தான் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்நிலையில், இந்தச் சம்பவத்திற்கு பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷரிப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

"சுவீடனில் வலதுசாரி பயங்கரவாதிகள் மேற்கொண்ட, புனித குர்ஆனை அவமதிக்கும் செயலைக் கடுமையாகக் கண்டிக்க வார்த்தைகள் போதாது. உலகெங்கிலும் உள்ள ஒன்றரை பில்லியன் இஸ்லாமியர்களின் மத உணர்வுகளை, கருத்து சுதந்திரம் என்ற போர்வையில் புண்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது," என்று அவர் தெரிவித்துள்ளார்.

**சவூதி அரேபியா, கத்தார் கடும் கண்டனம்**

சவூதி அரேபியா, கத்தார் ஆகிய நாடுகளும் இதற்குக் கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவத்திற்கு சவூதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சகமும் கடும் எதிர்ப்பு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

சவூதி வெளியுறவு அமைச்சகம் "விவாதங்கள், சகிப்புத்தன்மை, சகவாழ்வை ஊக்குவிப்பதில் சவூதி அரேபியா நம்பிக்கை கொண்டுள்ளது. மேலும், வெறுப்பையும் பயங்கரவாதத்தையும் நிராகரிக்கிறது," என்று குறிப்பிட்டுள்ளது.

போராட்டங்களை நடத்துவதற்கு அனுமதித்த சுவீடன் அதிகாரிகளையும் கத்தார் விமர்சித்துள்ளது.

"இது இரண்டு பில்லியன் உலக முஸ்லிம்களின் உணர்வுகளைத் தூண்டும் மிகவும் தீவிரமான சம்பவம். கத்தார் மத அடிப்படையிலான அனைத்து வெறுப்புப் பேச்சுகளையும் திட்டவட்டமாக நிராகரிக்கிறது," என்று கத்தார் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பரஸ்பர புரிந்துணர்வைப் பற்றிப் பேசிய கத்தாரின் வெளிவிவகார அமைச்சகம், வெறுப்பு, பாகுபாடு, வன்முறை ஆகியவற்றைக் கண்டிப்பதற்கான பொறுப்பைக் கையில் எடுக்குமாறு சர்வதேச சமூகத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

**சுவீடனில் தொடரும் போராட்டங்கள்**

குர்ஆன் எரிப்பு சம்பவத்திற்கு ஆதரவாகவும் எதிராகவும் சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் பேரணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த வாரம் ஸ்டாக்ஹோமில் நடந்த போராட்டங்களின்போது துருக்கிய அதிபர் ரிசெப் தையிப் அர்டோானின் உருவபொம்மை விளக்கு கம்பத்தில் தொங்கவிடப்பட்டது.

சுவீடன் பிரதமர், "ஸ்டாக்ஹோமில் துருக்கிய அதிபரின் பொம்மையைத் தலைகீழாகத் தொங்கவிட்டவர்கள், நேட்டோவில் இணைவதற்கான சுவீடனின் முயற்சிகளுக்குத் தீங்கு விளைவிக்க விரும்புவதாக" கூறினார்.

கடந்த ஆண்டும், ராஸ்மஸ் பலுதன் குர்ஆனை எரிக்கப் போவதாக மிரட்டி பல பேரணிகளை ஏற்பாடு செய்திருந்தார். இதைத் தொடர்ந்து சுவீடனில் போலீசாருக்கும் கோபமடைந்த  தீவிர வலதுசாரி ஆதரவாளர்களுக்கும் இடையே வன்முறை மோதல்கள் நடந்தன.




# சனிப் பெயர்ச்சி பலன்கள் 2023



## கடகம்



உங்கள் அறிவாற்றலும் தன்னம்பிக்கையும் கூடும். செயற்கரிய காரியங்களைச் சுலபமாகச் செய்து முடித்து நற்பெயரை எடுப்பீர்கள்.

சமுதாயத்தில் உயர்ந்தோரின் அன்பும் ஆசியும் கிடைக்கும். வாழ்க்கைத் தரம் உயரும். அனைவராலும் பாராட்டப்படுவீர்கள். செய்தொழிலை சீர்படுத்துவீர்கள். இதனால் வருமானம் உயரத் தொடங்கும். தாறுமாறாக இருந்த முதலீடுகளை முறைப்படுத்துவீர்.

குடும்பத்தில் மகிழ்ச்சி நிறையும். செய்தொழிலில் புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வீர்கள். எதிர்வரும் வாய்ப்புகளைத் தவறவிடாமல் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வீர்கள். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றிவிடுவீர்கள்.

பெரிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். அதே நேரம் அவைகளில் கையொப்பமிடும் முன் அனைத்து ஷரத்துகளையும் புரிந்துகொண்டு கையொப்பமிடுங்கள். மற்றபடி சமுதாயத்தில் உங்கள் மதிப்பு, கௌரவம் உயரும். பேச்சில் கண்ணியம் காப்பீர்கள்.

உடல் அசதிகளைப் பொருள்படுத்தாமல் மன மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள். உடன்பிறந்தோர் உங்கள் மனமறிந்து நடந்துகொள்வார்கள். வருங்காலத்தை வளமானதாக்க வலுவான அடித்தளங்களை அமைத்துக் கொள்வீர்கள்.

**உத்தியோகஸ்தர்கள்:** நன்றாக உழைத்தாலும், மேலதிகாரிகள் குறைகளைக் கண்டு சுட்டிக் காட்டுவார்கள். அலுவலகத்தில் கொடுத்திருந்த கடன் விண்ணப்பங்கள் சற்று தாமதமாகும். சற்று தாமதமாகவே பண வரவு வரும் வாய்ப்பு ஏற்படும். சிலருக்கு புதுப்புது அனுபவங்கள் கிடைக்கும்.

வியாபாரிகள்: லாபம் பெருகினாலும் கடும் போட்டிகளைச் சந்திக்க நேரிடும். வாடிக்கையாளர்களிடம் நிதானமாகப் பேசவும். முன்கோபத்தைத் தவிருங்கள். கூட்டாளிகளிடமும் நண்பர்களிடமும் ரகசியங்களை வெளிப்படுத்த வேண் டாம். புதிய முதலீடுகளில் கவனம் தேவை.

**விவசாயிகள்:** பழைய கடன்களை அடைத்து, புதுக் கடன்கள் கூடும். புதிய யுக்திகளைப் புகுத்தி லாபம் அடைந்தாலும் கால்நடைகளுக்கான பராமரிப்புச் செலவுகள் செய்ய நேரிடும். கருப்பு நிறப் பயிர்களால் சிறிது லாபம் கிடைக்கும். மனச் சோர்வைத் தவிர்க்கவும்.

**அரசியல்வாதிகள்:** இக்கட்டான தருணங்களில் சமயோஜித புத்தி கைகொடுக்கும். முயற்சிகளைக் கூட்டி, பல சாதனைகளைச் செய்து காட்டுவீர்கள். தொண்டர்களை அரவணைத்துச் செல்லுங்கள்.

**கலைத்துறையினர்:** சக கலைஞர்களின் ஆதரவால் நன்மைகளை அடைவீர்கள். அவர்களை அனுசரித்து நடந்து கொள்வீர்கள். படிப்படியான வளர்ச்சியைக் காண்பார்கள். செலவுகள் கட்டுக்கடங்காமல் இருக்கும். சிக்கனமாக இருக்கப் பழகிக் கொள்ளவும்.

**பெண்கள்:** தெய்வப் பலத்தைக் கூட்டிக் கொள்ளுங்கள். உடல் நலம் சுமாராகவே இருக்கும். போதும் என்கிற மனநிலையில் நிறைவைக் காண்பீர்கள். சகோதர, சகோதரி வழியில் பெரிய நலன்களை எதிர்பார்க்க முடி யாது. அநாவசியப் பேச்சுகளைத் தவிர்க்கவும்.

**மாணவர்கள்:** நன்றாகக் கடின உழைப்பைக் கொடுத்து படித்து சிறந்த மதிப்பெண்களைப் பெறுவீர்கள். கல்வி



ரீதியான சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வீர்கள். நினைவாற்றல் கூடும். சக மாணவர்களிடம் ஒற்றுமையைப் பேணுங்கள். எதிலும் நிதானத்துடன் செயல்பட்டு ஆனந்தம் அடைவீர்கள்.

**பரிகாரம்:** தட்சிணாமூர்த்தியை வழிபடவும்.

## சிம்மம்



எந்த ஒரு செயலிலும் அவசரமின்றி நிதானத்துடன் செயல்படுவீர்கள். தேவையில்லாத மனபயங்கள் விலகிவிடும். நண்பர்கள் ஆதரவை நல்குவார்கள். உறவினர்களிடம் இருந்து வந்த மனக்கசப்புகள் குறையும்.

உங்களின் செயலாற்றத் திறமையால் பெருமையாகப் பேசப்படுவீர்கள். பெற்றோரின் நலத்தைப் பேணுவீர்கள். நிலம், பூமி வகையிலும் எதிர்பாராத லாபம் அடைவீர்கள். மனதில் புதிய மாற்றங்கள் உண்டாகும். ஆன்மிகத்திலும், ஆலயத் திருப்பணிகளிலும் ஈடுபாடு அதிகரிக்கும். தூரத்து உறவினர்களின் எதிர்பாராத சந்திப்பு குடும்பத்தில் புதிய மலர்ச்சியை உண்டாக்கும்.

நேர்முக, மறைமுக எதிர்ப்புகளை அறிந்து கொண்டு விலக்கி விடுவீர்கள். பழைய காலத்தில் விற்க முடியாமல் இருந்த சொத்துகள் நல்ல விலைக்கு விற்பனையாகும். பாகப் பிரிவினை தொடர்பான விஷயங்களிலும் தைரியமாக முடிவு எடுப்பீர்கள். நல்ல வருமானம் வரும் சேமிப்புத் திட்டங்களிலும் சேர்வீர்கள்.

**உத்தியோகஸ்தர்கள்:** அலுவலகத்தில் நிலவும் இணக்கமான சூழ்நிலைகளில் இருந்து சற்று விலகி, சகஜமான நிலை உண்டாகும். உங்களது திறமைகள் பளிச்சிடும். சக ஊழியர்களை அனுசரித்து நடந்து கொள்வீர்கள். வேலைகளில் உள்ள குறைகளைக் குறைத்துக் கொள்வீர்கள். சிலர் விரும்பத்தகாத பணியிட மாற்றங்களையும் சந்திக்க நேரிடும். பயணங்களால் சில அனுபவங்கள் ஏற்படும். பழைய நிலுவைத் தொகைகள் சிறிது சிறிதாக வந்து சேரும்.

**வியாபாரிகள்:** கொடுக்கல் வாங்கலில் சராசரியான லாபங்களைக் காண்பீர்கள். பழைய கடன்களைத் தீர்த்து விடுவீர்கள். கூட்டாளிகளிடமும், நண்பர்களிடமும் குடும்பத்தினரிடமும் கலந்தாலோசித்த பிறகே அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளவும்.

**விவசாயிகள்:** செலவு குறைந்த மாற்றுப் பயிர்களை பயிர் செய்வதன்



மூலம் வரும் இழப்பை ஈடுகட்டலாம். நீர்வரத்து அதிகமாக இருப்பதால், பாசன வசதிகள் பெருகும். சேமிப்பை எடுத்து செலவு செய்யவும் நேரிடலாம்.

**அரசியல்வாதிகள்:** ஆட்சி மேலிடத்தின் பார்வை உங்கள் மீது விழும். அனைவரையும் அரவணைத்துச் செல்லுங்கள். உங்களுக்கு மறைமுக எதிரிகளினால் சில தொல்லைகள் ஏற்பட்டு விலகும். அதே நேரம் தொண்டர்களின் ஆலோசனைகளைக் கேட்ட பின்பே புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும். பேசும் பேச்சில் கவனம் தேவை.

**கலைத்துறையினர்:** கிடைத்திருக்கும் ஒப்பந்தங்களில் உங்களின் முழுத் திறமையைப் பயன்படுத்தி செய்து முடிப்பீர்கள். சக கலைஞர்களின் உதவி இந்தக் காலக்கட்டத்தில் எதிர்பார்க்க முடியாது. அவர்களிடம் பொறுமையாக சற்று அனுசரித்து நடக்கவும். பண வரவில் எந்தவொரு குறையும் இருக்காது.

**பெண்கள்:** உங்களின் பொறுப்பறிந்து நடந்து கொள்வீர்கள். கணவருடனான வாக்குவாதங்கள், நிலவி வந்த கருத்து வேறுபாடுகள் சற்று குறையும், சகோதர, சகோதரி உறவில் விரிசல்கள் மறைந்து சீர்படும். உடல் உபாதைகளில் பெரிய பாதிப்புகள் ஏற்படாது. வாகன வசதி ஏற்படும். பண வரவில் மாற்றம் இல்லை.

**மாணவர்கள்:** உடற்பயிற்சிகளைத் தவறாது செய்து சுறுசுறுப்பைக் கூட்டிக் கொள்ளுங்கள். புத்தி கூர்மையாகும். நல்ல மதிப்பெண்களைப் பெறுவதற்கு வாய்ப்பு உண்டாகும். பெற்றோர் சொல் கேட்டு நடப்பீர்கள்.

**பரிகாரம்:** நரசிம்மரை வழிபடவும்.

# பட்டப்பகலில் சிறைக்குள் சக கைதியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் கைதி!

கொழும்பு, ஜன. 26

வெலிக்கடை சிறைச்சாலையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவர் நேற்று முன் தினம் பட்டப்பகலில் மற்றுமொரு கைதியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட கைதி சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையின் எல் வார்டில் உள்ள கழிவறையில் இந்த சம்பவம் நடந்தது.

ஊழல் செய்த குற்றச்சாட்டில் 6 வருடச் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் கைதியை கொலைச் சம்பவத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகள் பொரளை பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்

29 வயது கைதி இயற்கைக் கடன் கழிக்க கழிவறைக்கு சென்றபோது, 52 வயது கைதி பலவந்தமாக கழிவறைக்குள் நுழைந்து 29 வயது கைதியின் வாயை பொத்தியதாக பொலிஸார் கூறுகின்றனர்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொரளை பொலிஸார், துஷ்பிரயோக சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறிய 45 வயது கைதி ஒருவரின் வாக்குமூலங்களையும், பாலியல் வன்கொடுமைக்கு ஆளான கைதியின் வாக்குமூலங்களையும் பதிவு செய்து, விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# நிலக்கரி வாங்குவதற்கு இரு வங்கிகளுடன் பேச்சு!

கொழும்பு, ஜன.26

நுரைச்சோலை அனல்மின் நிலையத்திற்கான நிலக்கரி இறக்குமதிக்கு நிதியளிப்பதற்காக இரண்டு அரச வங்கிகளிடம் கடன் பெறுவதற்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது.

அடுத்த மூன்று மாதங்களில் 21 கப்பல்கள் நிலக்கரி இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜனவரி வரும் என எதிர்பார்க்கப்பட்ட 7 நிலக்கரி கப்பல்களில் 5 கப்பல்கள் வந்துள்ளது என்றும் மீதமுள்ள இரண்டு கப்பல்கள் இம்மாதத்திற்குள் வரும் என்றும் அவர் கூறினார்.

வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன் வசதிகளின் அளவுக்கேற்ப இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து எரிபொருள் கொள்வனவு செய்யப்படும் என தெரிவித்தார். இதனை கொண்டு குறைந்தளவிலான மின்சார துண்டிப்போடு மின்சாரம் வழங்கப்படும் எனவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (அ)

# உயர் அதிகாரி தாக்கினார் என்று கூறி பொலிஸ் அதிகாரி வைத்தியசாலையில்!

கொழும்பு, ஜன.26

பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தாக்கினார் என கூறி, கெப்பிற்றிக்கொல்லாவ பதில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியான பிரதம பொலிஸ் பரிசோதகர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக அவர் கெப்பிற்றிக்கொல்லாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைகளுக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பிரதேசத்திற்கு பொறுப்பான உயர் அதிகாரியினால் தாக்கப்பட்டதாக கூறப்படும் குறித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தாடை மற்றும் வாயின் உட்புற பகுதியில் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கெப்பிற்றிக்கொல்லாவ பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (எஸ்.எஸ்.பி) பிரதம பொலிஸ் பரிசோதகரை தனது அலுவலகத்திற்கு வரவழைத்து நீதிமன்றில் இடம்பெற்று வரும் வழக்கு தொடர்பாக விசாரித்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது சிரேஷ்ட அதிகாரியினால் தாம் தாக்கப்பட்டதாக பிரதம பரிசோதகர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

எனினும் கெப்பிற்றிக்கொல்லாவ சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குறித்த குற்றச்சாட்டை மறுத்துள்ளாரென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)

# அம்பாறையில் பயிர்களை தாக்கும் நோய்கள் அதிகரிப்பு

அம்பாறை, ஜன. 26

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் தற்போது வேளாண்மை குடலைப் பருவமாகவும், கதிர் விரியும் நிலையிலும் இருந்து வருகிறது. இவ்வாறான சூழ்நிலையில், வேளாண்மை வளர்ச்சி குன்றியும் மஞ்சள் நிறமாகவும் மாறி வரும் நிலை, ஒரு வகை நோய்த்தாக்கமாக இருக்கும் என பங்கசு, கிருமி நாசினிகளை விவசாயிகள் விசிறி வருகின்றனர்.

இவை தவிர, அறக்கொட்டி யான் பூச்சியின் தாக்கம், ஈ பூச்சியின் தாக்கம் என பல்வேறு நோய்கள் நெற்செய்கைக்கு ஏற்பட்டுவருகிறது. இதனால், விவசாயச் செய்கை பெரிதும் பாதிப்படைந்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பொருளாதாரப் பிரச்னை, கொரோனா முடக்கம் எனப் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து, கடன்பட்டு விவசாயம் மேற்கொண்ட விவசாயிகளின் நிலை மிகவும் மோசமாகவுள்ளது. (அ)

# அனலைதீவு கடற்கரையில் 60 கிலோ கஞ்சா சிக்கியது

யாழ்ப்பாணம், ஜன.26

அனலைதீவு கடற்கரையில் 60 கிலோகிராம் கேரள கஞ்சாவை இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

ஊர்காவற்துறை பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் வடக்கு கடற் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 20 மில்லியன் ரூபா மதிப்புள்ள குறித்த கஞ்சாப் பொதி கள் மீட்கப்பட்டுள்ளன.

25 பொதிகளில் பொதி செய்யப்பட்ட கஞ்சா, இரண்டு சாக்கு மூட்டைகளில் அனலைதீவு கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டதாக இலங்கை கடற்படை தெரிவித்தது.

இதன்படி, குறித்த கஞ்சா போதைப் பொருள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ)

## கல்வி tv CHANNEL-1

**26.01.2023**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**26.01.2023**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# மாணவர்கள் பேரணி

அம்பாறை, ஜன. 26

நிந்தவூர் ஜெர்மன் நட்புறவு பாடசாலை மாணவர்கள் பொது மக்களை விழிப்பூட்டும் பேரணி ஒன்றை நடத்தினர்.

தமது பாடசாலை அமைந்துள்ள பிரதேச வீதிகளில் இனம் தெரியாதோர் தினமும், தமது வீடுகளில் சேரும் திண்மக் கழிவுகள், குப்பைகளை வீசி விட்டுச் செல்வதால் பெரும் சுகாதாரச்சீர்கேடுகள் ஏற்படுவதுடன், நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டுள்ளதுடன், கட்டாக் காலி நாய்களின் பெருக்கமும் பாடசாலைக்கு வரும் வீதிகளில் அதிகரித்து மாணவர்களுக்கு பெரும் தொல்லை ஏற்பட்டுள்ளதாகவும் பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்கக் கோரியும், குப்பைகள் கழிவுகளை குறித்த சுற்றுப்புற வீதிகளில் வீசாது விழிப்பூட்டவும் மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

பின் தங்கிய பிரதேசத்திலுள்ள இப்பாடசாலை முன்றலிலிருந்து மாணவர்களான சிறார்கள் பதாதைகளை ஏந்திய வாறு இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

ஜெர்மன் நட்புறவு பாடசாலையை வந்தடையும் வீதிகளூடாக கோசங்களையும் எழுப்பியவாறு மாணவர்களது ஆர்ப்பாட்டப் பேரணி இடம் பெற்றது.

இதேவேளை இந்தப்பாடசலை ஆசிரியர்கள், மாணவர்களைப் பெரிதும் பாதித்துள்ள மேற்படி விடயம் தொடர்பில் நிந்தவூர் பிரதேச சபையும் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் நடவடிக்கையெடுக்க முன்வர வேண்டுமெனவும்,

குறிப்பாக குப்பைகளை வீசுதல், மற்றும் இதனால் திரளும் கட்டாக்காலி நாய்களையும் ஒழித்துக்கட்ட ஆவன செய்யப்பட வேண்டுமெனவும் பாடசாலை சமூகத்தினர் கோருகின்றனர்.

(அ)

# அரசு தேர்தலுக்கு பயப்படுகின்றது!

## மு. கா. முக்கியஸ்தர் உதுமாலெப்பை கருத்து

அம்பாறை, ஜன. 26

"மக்கள் தம்மை நிராகரித்து விடுவார்கள் என்ற பயத்தில் தேர்தலை ஒத்தி வைக்க அரசாங்கம் பலவழிகளிலும் திட்டமிடுகின்றது .

என்ன நடந்தாலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நீண்ட காலத்திற்குப் பிறகு மரச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. வெற்றி நிச்சயம்."

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தரும், முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சருமான உதுமாலெவ்வை அம்பாறை கச்சேரியில் வைத்து தெரிவித்தார் .

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று மக்கள் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாகி வாழ வழியின்றி தவிக்கின்றார்கள். அரச உத்தியோகத்தர்கள் கூட வாழ முடியாத நிலையில் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி இருக்கின்றார்கள். இந்த நிலையில் தேர்தல் அவசியமா?



தேர்தல் நடக்குமா இல்லையா என்பது ஒரு புறம். ஆனால் அரசியல் கட்சி என்ற ரீதியிலே முஸ்லிம் காங்கிரஸ் அனைத்து சபைகளிலும் போட்டியிடுகின்றது. இந்த நாட்டிலே மேலும் ஒருமுறை எமது பலத்தை நிரூபிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதற்கு மக்கள் அனைவரும் ஆணை தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது. அரசாங்கம் இந்த தேர்தலை ஒத்தி வைக்கலாம் என்ற நிலைப்பாடு பலருக்கும் இருக்கின்றது.

இருந்தபோதிலும் இந்த அரசாங்கத்திலே மக்கள் எதிர்நோக்கும் நோக்குகின்ற பிரச்னைகளை எடுத்துச் சொல்கின்ற ஒரு களமாக பயன்படுத்தலாம். மக்கள் அரசாங்கத்தை நிராகரித்து விடுவார்கள் என்ற பயமும் அவர்களுக்கு இருக்கின்றது. எனவே தமிழ் பேசும் மக்கள் அம்பாறை மாவட்டத்திலே சமகால அரசாங்கத்துக்கு உரிய பதிலை வழங்க வேண்டும். அந்த எதிர்ப்பை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் - என்றார்.

(அ)

# மலேசிய றோட்டரி கழகத்துடன் சந்திப்பு

அம்பாறை, ஜன. 26

மலேசிய றோட்டரி கழகத்துடன் மட்டக்களப்பு றோட்டரிக் கழகம் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டது .

அதன் முதல் அங்கமாக மலேசியா றோட்டரி கழகத்தை திருகோணமலை றோட்டரி நிலையத்தில் மட்டக்களப்பு றோட்டரி கழகத் தலைவர் றோட்டரியன் பி.ரமணன் தலைமையிலான குழுவினர் சந்தித்து கலந்துரையாடினர்.

அங்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய



பல வேலைத் திட்டங்கள் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மலேசியா றோட்டரி கழகத்தினால் வசதி குறைந்த மாணவிக்கு அங்கு சைக்கிளும் வழங்கப்பட்டது .

(அ)

# கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் கூட்டமைப்பு இறுமாப்புடன் செயல்படுகின்றது

## அஹமட் புர்க்கான் குற்றச்சாட்டு

அம்பாறை, ஜன. 26

கல்முனை வடக்கு உப பிரதேச செயலக விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பானது இறுமாப்புடன் செயற்படுகின்றது.பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனின் செயற்பாடு கண்டிக்கத்தக்கது என பொதுஜன பெரமுனவின் முன்னாள் கல்முனை பிராந்திய இணைப்பாளரும் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் கிழக்கு மாகாண இணைப்பாளருமான அஹமட் புர்க்கான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கல்முனை உப பிரதேச விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பானது இறுமாப்புடன் செயற்படுகின்றது.பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனின் செயற்பாடு கண்டிக்கத்தக்கது .தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது கல்முனை விடயம் தொடர்பில் பல கட்சிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு எந்தவொரு தீர்மானத்தையும் இதுவரை எட்டவில்லை.நாங்கள் சகல மக்களையும் உள்வாங்கியுள்ள கட்சி என்ற அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனிடம் வேண்டுகோள் ஒன்றினை விடுக்க விரும்புகின்றோம்.

கல்முனை விடயத்தை நேரடியாக எம்முடன் பேச வேண்டும்.அவ்வாறு பேச வரவில்லையாயின் தமிழ் மக்களுக்கு அவரால் நிரந்திர தீர்வொன்றினை பெற்றுக் கொடுக்க முடியாது.கல்முனை விவகாரத்தில் எமக்கு என்ன அதிகாரம் உள்ளது என்ற கேள்வியை உங்களால் கேட்க முடியும்.எதிர்வரும் உள்ளூராட்சிச் சபை தேர்தலில் மக்கள் ஐக்கிய காங்கிரஸ் கட்சியை எவ்வாறு ஆதரித்து உள்ளார்கள் என்பதை தேர்தல் முடிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிற்கு மாத்திரமல்ல அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஒரு எடுத்து காட்டாக அமையும்.

சாய்ந்தமருது விடயத்தில் கூட ஒரு போலியான விம்பத்தை தோற்றுவித்து மக்களை சிலர் திசைதிருப்ப பார்க்கின்றனர். மாற்றத்திற்கான ஒரு வழியாக மக்கள் காங்கிரஸ் கட்சியை மக்கள் மயப்படுத்தி வருகின்றோம்.இக்கட்சிக்கு ஆதரவு வழங்குவதன் ஊடாக இப்பகுதிகளில் உள்ள நிரந்திர பிரச்னைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும். நிச்சயமாக அவ்வாறான விடயங்களை பெற்றுக்கொடுப்போம் என இவ்விடயத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அத்துடன் தேசிய கட்சிகளுடன் பொது உடன்பாடுகளை கொண்டு செயற்பட்டுள்ளேன். வியாபார நோக்கோடு சில கட்சிகள் செயற்படுகின்றன. ஐக்கிய காங்கிரஸ் கட்சியானது சகல மக்களையும் இணைத்து செல்கின்ற ஒரு கட்சி.அதனால் தான் இன்று இணைந்து செயற்படுகின்றோம். எதிர்வரும் தேர்தலில் அதிக ஆசனங்களை ஐக்கிய காங்கிரஸ் கட்சி பெற்றுக்கொண்டு ஏனைய கட்சிகளுக்கு சவாலாக அமையும்- என்றார். (அ)

# இந்தியாவைவிட இலங்கையில் கலை ஆர்வம் மிகவும் அதிகம்!

## நடனக் கலைஞர் சிதம்பரம் சுரேஷ் கருத்து

அம்பாறை, ஜன. 26

"இந்தியாவில் கலை பிறந்து இருக்கலாம். ஆனால் இலங்கையில் தான் கலை ஆர்வம் மிகவும் கூடுதலாக இருக்கிறது ."

- இவ்வாறு அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த பிரபல நடன கலைஞர் சிதம்பரம் ஆர் சுரேஷ் தெரிவித்தார்.

காரைதீவு விபுலானந்தா மணிமண்டபத்தில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக நடனத்துறை காரைதீவு மாணவி ஜெயகோபன் தக்சாளினியின் அழைப்பை ஏற்று இக் கலைக்குடும்பத்தினர் வருகை தந்தனர்.

அங்கு அவர்கள் சுவாமி விபுலானந்தர் பிறந்த இல்லத்தையும் அரும்பொருள் காட்சியகத்தையும் பார்வையிட்டனர்.

பின்னர் மணிமண்டபத்தில் விபுலானந்த நாட்டிய நிருத்திய மாணவிகளுக்கு பயிற்சிகள் இடம்பெற்றது.

அந்நிகழ்ச்சி மணிமண்டப முன்னாள் தலைவர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது .

அங்கு அவர் மேலும் பேசுகையில் -

சுவாமி விபுலாநந்தர் பிறந்த இல்லத்தை பார்க்க கிடைத்ததை ஒரு பாக்கியமாக கருதுகின்றேன். தமிழ்நாட்டில் உள்ள மாணவர்களை விட இலங்கையில் உள்ள மாணவர்கள் கலையில் ரொம்ப ஆர்வமாக இருக்கிறார்கள். எனக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் நிறைய நண்பர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வெளிநாடுகளில் பல கலைப் பள்ளிகளை நடத்தி வருகின்றார்கள். நான் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயின்றவன். சிதம்பரம் நடராஜர் ஆலயம் சிறப்பானது. பரதநாட்டியத்தில் அரைமண்டி, முழு மண்டி முக்கியமானது. இதை இன்று உங்களுக்கு சொல்கின்றேன் - என்றார்.

(அ)

# 2019இல் பாகிஸ்தானும் இந்தியாவும் அணு ஆயுதப் போருக்கு தயாராகின!

## அமெரிக்க முன்னாள் வெளியுறவு அமைச்சர்

நியூயோர்க், ஜன. 26

பாகிஸ்தானும் இந்தியாவும் கடந்த 2019 ஆம் ஆண்டு அணுஆயுத போரை நடத்த இருந்ததாக அமெரிக்க முன்னாள் வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் இருந்த போது அந்நாட்டின் வெளியுறவு அமைச்சராக 2018 முதல் 2021 வரை இருந்தவர் மைக் பாம்பியோ. தனது அனுபவங்கள் தொடர்பாக இவர் எழுதி சமீபத்தில் வெளியான புத்தகத்தில், கடந்த 2019ஆம் ஆண்டு பாகிஸ்தானும் இந்தியாவும் அணுஆயுத தாக்குதல் நடத்த இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பாகிஸ் தானைச் சேர்ந்த ஜெய்ஷ் இ முகம்மது பயங்கரவாத அமைப்பு, ஜம்மு காஷ்மீரின் புல்வாமாவில் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த துணை ராணுவப் படையினரை குறிவைத்து தாக்குதல் நடத்தினர். இதில் 40 துணை ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். இதற்கு பதிலடி கொடுக்கும் நோக்கில், பாகிஸ்தானின் பாலா கோட் பகுதியில் உள்ள ஜெய்ஷ் இ முகம்மது பயங்கர வாத அமைப்பின் முகாம் மீது இந்திய ராணுவம் வான் தாக்குதல் நடத்தி அழித்தது. இதையடுத்து, இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றம் அதிகரித்தது.

இந்த சம்பவத்தை குறிப்பிட்டு எழுதியுள்ள மைக் பாம்பியோ, "கடந்த 2019ஆம் ஆண்டு பிப்ரவரியில் பாகிஸ்தானும் இந்தியாவும் அணுஆயுத போரை நடத்த இருந்த விவகாரம் உலகிற்கு எந்த அளவுக்குத் தெரியும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், இந்த இரு நாடுகளும் அணுஆயுத போருக்கு நெருங்கின. அது எனக்கு நன்கு தெரியும். அப்போது நான் வியட்னாமின் ஹனோய் நகரில் இருந்தேன். பாகிஸ்தானின் தளர்வான பயங்கரவாத எதிர்ப்பு கொள்கை காரணமாக 40 இந்தி யர்கள் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக இந் தியா, பாகிஸ்தானுக்குள் சென்று பயங்கரவாதிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தியது. அப்போது பாகிஸ்தானி யர்கள் இந்திய ராணுவ விமானத்தை துப்பாக்கியால் சுட்டனர். இதில், இந்திய விமானி பிடிபட்டார்.

உடனடியாக நான் இந்திய வெளியுறவு அமைச்சரி டம் (சுஷ்மா சுவராஜ்) பேசினேன். அப்போது அவர், இந்தியா மீது பாகிஸ்தான் அணுஆயுத தாக்குதல் நடத்த திட்டமிட்டு அதற்கான பணிகளில் ஈடுபட்டு வருவதாக தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது என்றும், எனவே, இந்தியா தனக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்றும் குறிப்பிட்டார். அப்போது நான், எதையும் செய்துவிடாதீர்கள் எனக்கு ஒரு நிமிடம் மட்டும் தாருங்கள் என்று கூறிவிட்டு, உடனடியாக பாகிஸ்தானின் உண்மையான தலைவராக இருந்த கமர் ஜாவெத்(ராணுவ தலைமை தளபதி) இடம் பேசினேன்.



இந்திய வெளியுறவு அமைச்சர் கூறியதை அவரிடம் தெரிவித்தேன். அப்போது அவர் அது உண்மை அல்ல என தெரிவித்தார். அதோடு, இந்தியாதான் பாகிஸ்தான் மீது அணுஆயுத போரை நடத்த தயாராகி வருவதாக வும் அவர் புகார் தெரிவித்தார். இரு நாடுகளுமே மற் றொரு நாட்டுக்கு எதிராக அணுஆயுத போரை நடத் தும் எண்ணம் கொண்டிருக்கவில்லை என்பதை புரிய வைக்க எனக்கு சில மணி நேரம் தேவைப்பட்டது." என தெரிவித்துள்ளார். மைக் பாம்பியோவின் இந்த தகவ லுக்கு இந்திய வெளியுறவு அமைச்சகம் உடனடியாக மறுப்பு தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## அமெரிக்காவை தாக்கிய சூறாவளி

நியூயோர்க், ஜன. 26

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை அதி பயங்கர சூறாவளி தாக்கியுள்ளது.

மணிக்கு 64 கிலோமீற்றர் வேகத்தில் சுழன்றடித்த சுழல் காற்றில் சிக்கி வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள், மின் கம்பங்கள் என அனைத்தும் சேதமடைந்தன.

மரங்கள் முறிந்து விழுந்து சாலைகளை முடக்கின. பலத்த காற்றால், நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த வாகனங்கள் வீதி தடுப்புகள் மீது மோதி விபத்துக்குள் ளாகின. வீடுகள் உள்ளிட்ட கட்டடங்களின் மேற்கூரை கள் பல மைல் தொலைவிற்கு தூக்கி எறியப்பட்டுள்ளன.

மேலும், சூறாவளி காற்றில் சிக்கி மின் கம்பங்களும் சாய்ந்ததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, ஆயிரக்கணக் கான வீடுகள் இருளில் மூழ்கியுள்ளன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் முடங்கியுள்ளது. (அ)

## நியூசிலாந்தின் புதிய பிரதமராக கிறிஸ் ஹிப்கின்ஸ் பதவி ஏற்பு!



வெலிங்டம், ஜன. 26

முன்னாள் பிரதமர் ஜசிந்தா ஆர்டர்ன் பதவி விலகி யதை அடுத்து நியூசிலாந்தின் புதிய பிரதமராக கிறிஸ் ஹிப்கின்ஸ் பதவியேற்றுள்ளார். நியூசிலாந்தின் தற் போதைய ஆளும் கட்சியான தொழிலாளர் கட்சியின் தலைவராக அவர் பதவியேற்றமையை தொடர்ந்து இந்த பதவி ஏற்பு நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதற்கு முன்னர் அவர் பொலிஸ் அமைச்சராக கட மையாற்றியிருந்தார். முன்னாள் பிரதமரான ஜசிந்தா ஆர்டர்ன் தமது பதவி விலகல் கடிதத்தை ஆளுநர் சிண்டி கிரோவிடம் கையளித்தார்.

இதன்படி, நியூசிலாந்தின் 41ஆவது பிரதமராக கிறிஸ் ஹிப்கின்ஸ் பதவியேற்றுள்ளார்.

அவருக்கு தமது பாராட்டுக்களை முன்னாள் பிரதமர் ஜசிந்தா ஆர்டர்ன் தெரிவித்துள்ளார். (அ)



## வடகொரிய தலைநகரில் 5 நாட்களுக்கு ஊரடங்கு!

பியொங்யாங், ஜன. 26

வடகொரிய தலைநகர் பியொங்யாங்கில் 5 நாட் களுக்கு முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

சுவாச நோய் பாதிப்புகள் அதிகரித்து வருவதால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படுவதாக அந்நாட்டு அரசாங்கம் அறி வித்துள்ளது. அத்துடன், மக்களை வீடுகளிலேயே இருக்குமாறும், உடல்வெப்பநிலை பரிசோதனை மேற் கொள்ளுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கொரோனா பரவலால் இந்த நடவடிக்கை எடுக்கப் படுவதாக வடகொரிய அரசாங்கம் குறிப்பிடவில்லை.

பியொங்யாங் தவிர மற்ற பகுதிகளில் ஊரடங்கு உள் ளிட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதா என்ற தக வலும் வெளிவரவில்லை. (அ)



## ஆப்கானில் கடும் குளிர் 157 பேர் உயிரிழப்பு!

காபூல், ஜன. 26

ஆப்கானிஸ்தானில் நிலவும் கடும் குளிர் காரணமாக 157 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடும் குளிரான காலநிலை காரணமாக சுமார் 70 ஆயிரம் பண்ணை விலங்குகள் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் ஊடக அறிக்கைகளின்படி, பல தசாப்தங்களில் ஆப்கானிஸ்தானை பாதிக்கும் மிக மோச மான குளிர்கால வானிலை இதுவாகும் என கூறப்படு கின்றது.

பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற் காக இராணுவ ஹெலிகொப்டர்கள் மலைப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட நிலையில், கடும் பனிப்பொழிவு காரண மாக அந்த விமானங்கள் தரையிறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (அ)

## ஆளில்லா போர் விமானங்களுக்கான உலகளாவிய சந்தையில் சீனா ஆதிக்கம்!

பீஜிங், ஜன. 26

கடந்த தசாப்தத்தில் ஆளில்லா போர் விமானங்களுக் கான உலகளாவிய சந்தையில் சீனா ஆதிக்கம் செலுத் துவதாக தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

சவூதி அரேபியா முதல் மியான்மர், ஈராக் மற்றும் எத்தியோப்பியா வரை உலகெங்கிலும் உள்ள அதிக மான இராணுவத்தினர் சீன போர் ஆளில்லா விமானங் களை குவித்து போர்க்களத்தில் நிலைநிறுத்தி வருகின்ற னர்.

உலகளாவிய ஆயுத பரிமாற்றங்களைக் கண்காணிக் கும் ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறு வனத்தின் தரவு, கடந்த தசாப்தத்தில் 17 நாடுகளுக்கு சுமார் 282 போர் ஆளில்லா விமானங்களை சீனா வழங்கி யுள்ளது.

உலகில் மிகவும் மேம்பட்ட யு.ஏ.வி.களைக் கொண்ட அமெரிக்கா, ஒரே காலகட்டத்தில் வெறும் 12 போர் ஆளில்லா விமானங்களை வழங்கியுள்ளது. அவை அனைத்தும் பிரான்ஸ் மற்றும் ஐக்கிய இராச்சியத்திற்கு வழங்கியுள்ளது.

இருப்பினும், நிராயுதபாணியான கண்காணிப்பு ஆளில்லா விமானங்களை ஏற்றுமதி செய்வதில் அமெ ரிக்கா முன்னணியில் உள்ளது.

சீனாவின் போர் ஆளில்லா விமானங்களை வாங்குப வர்கள் உளவுத்துறை சேகரிப்பைத் தவிர, வான்வழி ஏவு கணைகளையும் சுடக்கூடிய விமானங்களை கொள்வனவு செய்கின்றனர்.

இதில் மொராக்கோ, எகிப்து, அல்ஜீரியா, ஐக்கிய அரபு அமீரகம், பாகிஸ்தான் மற்றும் செர்பியா ஆகி யவை அடங்கும். குறிப்பான சீன ஆளில்லா விமானங் களின் வெற்றி வீதம் கிட்டத்தட்ட 100 சதவீதம். (அ)

# இந்தியாவிடம் தொடரை முற்றாக இழந்தது நியூசி.

## தவரிசையிலும் இந்தியா முதலிடம்




இந்தூர், ஜன. 26

நியூசிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றுள்ளது இந்திய கிரிக்கெட் அணி.

இதன் மூலம் தொடரை 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. அத்துடன், சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அணிகளுக்கான தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ளது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடரில் விளையாடுகிறது. இரு அணிகளும் ஒருநாள் தொடரில் விளையாடின. இந்தூரில் இந்த தொடரின் கடைசி போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் நியூசிலாந்து பந்துவீசியது. இந்திய அணி 385 ஓட்டங்கள் குவித்தது.

386 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நியூசிலாந்து விரட்டியது. அந்த அணிக்காக தொடக்க வீரராக களம் இறங்கிய அலன் ஓட்டம் எதுவும் எடுக்காமல் பாண்ட்யா வீசிய முதல் ஓவரில் வெளியேறினார். தொடர்ந்து நிக்கோல்ஸுடன் 106 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் கொன்வே. நிக்கோல்ஸ், 42 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார்.

பின்னர் மிட்செல் உடன் 78 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினார். மிட்செல், 24 ஓட்டங்களில் வெளியேறினார். தொடர்ந்து வந்த அந்த அணியின் அணித் தலைவர் ரொம் லதாம் ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். பிலிப்ஸ் 5 ஓட்டங்களில் வெளியேறினார்.

100 பந்துகளில் 138 ஓட்டங்கள் எடுத்து கொன்வே தனது விக்கெட்டை இழந்தார். பிரஸ்வெல், 26 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர், அடுத்தடுத்து அந்த அணி விக்கெட்களை இழந்தது. கடைசி விக்கெட்டாக சாண்ட்னர் 34 ஓட்டங்களில் வெளியேறினார். 41.2 ஓவர்களில் 295 ஓட்டங்கள் எடுத்து நியூசிலாந்து சகல விக்கெட்களையும் இழந்தது.

இந்தியா சார்பில் தாகூர் மற்றும் குல்தீப் யாதவ் தலா 3 விக்கெட்களை கைப்பற்றினர். சஹல், 2 விக்கெட்களை எடுத்திருந்தார். பாண்ட்யா மற்றும் உம்ரான் மாலிக் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

முன்னதாக, முதல் இனிங்ஸில் இந்திய அணிக்காக அதன் தலைவர் ரோஹித் மற்றும் கில் தொடக்கம் கொடுத்தனர். இருவரும் முதல் விக்கெட்டுக்கு 212 ஓட்டங்கள் சேர்த்தனர். ஒரே ஓவரில் இருவரும் சதம் பதிவு செய்து அதிரடி காட்டினர்.

ரோஹித், 85 பந்துகளில் 101 ஓட்டங்கள் குவித்து வெளியேறினார். கில், 78 பந்துகளில் 118 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் இஷான் கிஷன், கோலி, சூர்யகுமார் யாதவ், வாஷிங்டன் சுந்தர் ஆகியோர் தங்கள் விக்கெட்களை இழந்து பெவிலியன் திரும்பினர். அந்த சமயத்தில் இந்திய அணிக்கு சரியான இணைப்பாட்டம் அமையவில்லை.

பாண்ட்யா மற்றும் ஷர்துல் தாக்கூர் இணைந்து 54 ஓட்டங்களுக்கு 7ஆவது விக்கெட்டுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். தாகூர், 25 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். பாண்ட்யா, 38 பந்துகளில் 54 ஓட்டங்கள் எடுத்து விக்கெட்டை இழந்தார்.

50 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 385 ஓட்டங்களை குவித்திருந்தது. (ஐ)



## ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் சிட்சிபாஸ் அரையிறுதியில்!

மெல்பர்ன், ஜன. 26

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சிட்சிபாஸ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார். அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதில், காலிறுதி ஆட்டம் ஒன்றில் 18ஆம் நிலை வீரரான ரஷ்யாவின் கரேன் கச்சனோவ், 29ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் செபஸ்ரியன் கோர்டாவை எதிர்த்து விளையாடினார்.

இதில் கரேன் கச்சனோவ் 7-6 (7-5), 6-3, 3-0 என்ற செற் கணக்கில் முன்னிலை வகித்த போது செபஸ்ரியன் கோர்டாவுக்கு வலது முழங்கையில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவர், ஆட்டத்தில் இருந்து விலகினார். இதனால் கரேன் கச்சனோவ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் 3-ம் நிலை வீரரான கிரீஸின் ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் 6-3, 7-6 (7-2), 6-4 என்ற செற் கணக்கில் 71-ம் நிலை வீரரான செக் குடியரசின் ஜிரி லெஹெக்காவை வீழ்த்தி அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)

## இருபது - 20 கிரிக்கெட்டின் சிறந்த வீரராக சூர்யகுமார்

டுபாய், ஜன. 26

ஆடவர் இருபது - 20 கிரிக்கெட்டில் 2022ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரராக இந்தியாவின் சூர்யகுமார் யாதவ் தெரிவாகியுள்ளதாக ஐ. சி. சி. அறிவித்துள்ளது.

32 வயது சூர்யகுமார் யாதவ் இந்திய அணிக்காக 20 ஒருநாள், 45 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். 45 இருபது - 20 ஆட்டங்களில் 3 சதங்களுடன் 1,578 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

2022இல் 31 ஆட்டங்களில் விளையாடி 2 சதங்களுடன் 1,164 ஓட்டங்கள் எடுத்திருந்தார். ஐ. சி. சி. இருபது - 20 தரவரிசையில் முதலிடத்தில் உள்ளார். இருபது -20 தரவரிசையில் 900 புள்ளிகளைப் பெற்ற முதல் இந்தியர் என்கிற சாதனையைச் சமீபத்தில் படைத்தார்.

இந்நிலையில் ஆடவர் இருபது - 20 கிரிக்கெட்டில் 2022-ம் ஆண்டுக்கான சிறந்த வீரராக சூர்யகுமார் யாதவை அறிவித்துள்ளது ஐ. சி. சி. (ஐ)





## விக்ரோறியா அசரங்கா அரையிறுதிக்கு தகுதி!

மெல்பர்ன், ஜன. 26

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் மகளிர் ஒற்றையர் பிரிவில் 3ஆம் நிலை வீராங்கனையான ஜெசிகா பெகுலாவை வீழ்த்தி அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார் பெலாரஸ் வீராங்கனை விக்ரோறியா அசரங்கா.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதில், மகளிர் ஒற்றையர் பிரிவில் 24ஆம் நிலை வீராங்கனையான பெலாரசின் விக்ரோறியா அசரங்கா காலிறுதி சுற்றில் 3ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் ஜெசிகா பெகுலாவை 6-4, 6-1 என்ற நேர் செற்றில் தோற்கடித்தார். இந்த ஆட்டம் ஒரு மணி நேரம் 37 நிமிடங்களில் முடிவடைந்தது. (ஐ)

## பொண்டிங்கின் சாதனையை சமன் செய்தார் ரோஹித் சர்மா!



இந்தூர், ஜன. 26

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக சதங்கள் விளாசியவர்களின் பட்டியலில் 3ஆவது இடத்தில் இருந்த றிக்கி பொண்டிங்கின் 30 சதங்கள் சாதனையை சமன் செய்துள்ளார் இந்தியாவின் ரோஹித் சர்மா.

இந்தியா - நியூசிலாந்து அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இந்தூரில் நேற்று நடைபெற்றது.

இதில் இந்திய அணியின் தலைவரும் தொடக்க வீரருமான ரோஹித் சர்மா 83 பந்துகளில், 6 சிக்ஸர்கள், 9 பௌண்ட்ரிகளுடன் சதம் விளாசினார். கடைசியாக அவர், கடந்த 2020 ஜனவரி நடைபெற்ற போட்டியில் சதம் விளாசியிருந்தார்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ரோஹித் சர்மாவின் 30ஆவது சதமாகவும் இது அமைந்தது. இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அதிக சதங்கள் விளாசியவர்களின் பட்டியலில் 30 சதங்களுடன் உள்ள அவுஸ்திரேலியாவின் றிக்கி பொண்டிங்கின் சாதனையை சமன் செய்துள்ளார் 35 வயதான ரோஹித் சர்மா.

இந்த மைல் கல்லை ரோஹித் சர்மா 241ஆவது போட்டியில் எட்டியுள்ளார். றிக்கி பொண்டிங் 30 சதங்களை 375 போட்டிகளில் அடித்திருந்தார். இந்த வகை சாதனையில் சச்சின் டெண்டுல்கர் (49 சதங்கள்), விராட் கோலி (46) ஆகியோர் முதல் இரு இடங்களில் உள்ளனர்.

இதேசமயம் நேற்று முன்தினம் ரோஹித் சர்மா 83 பந்துகளில் சதம் விளாசினார். இது அவர், அடித்த 2ஆவது விரைவு சதமாகும். இதற்கு முன்னர் 2018ஆம் நாட்டிங்ஹாமில் இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 82 பந்துகளில் சதம் விளாசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கை, இந்திய நாடுகள் ஒத்துழைப்புடன் இணைந்து செயற்படவேண்டியது முக்கியம்!

## இந்திய தூதுவர் கோபால் பாக்லே கருத்து



**கொழும்பு, ஜன. 26**

**சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவை இந்தியா 2047 ஆண்டிலும், இலங்கை 2048 ஆண்டிலும் கொண்டாட வுள்ள நிலையில் இலங்கை, இந்திய நாடுகள் ஒத்துழைப் புடன் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது மிக முக்கியம் என இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.**

இந்தியாவின் 74ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத் தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்று கையிலே இந்திய தூதுவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

இந்தியா வளர்ந்து வரும் பொருளாதாரத்தையும் பல் வகைமையுடைய ஜனநாயகத் தையும் கொண்டுள்ள நாடாகும். இந்த நிலைமை இலங்கைக்கும் பொதுவானாதாகும். மேலும் இலங்கை இன்னும் சில நாட்களில் தனது 75 ஆவது சுதந்திர தினத் தைக் கொண்டாடவுள்ளது.

எனவே மிகவும் நெருங்கிய நண்பர்கள் என்ற அடிப்படை யில் நாம் இந்நிகழ்வை ஒற்று மையின் உண்மையான ரிதமாக கொண்டாடவேண்டும்.

இது வெவ்வேறு இசைக் குழுக்களின் இசைச் சங்கமம் மட்டுமல்ல இது இலங்கை மற்றும் இந்தியாவின் ஒற்று மையையும் குறிக்கும்.

75 ஆவது சுதந்திர தினத்து டன் நாமும் எமது ஒற்றுமை மற்றும் 75 வருட இராஜதந்திர உறவைக் கொண்டாடுவதுடன் எமது நூற்றாண்டு சுதந்திர விழாவை நோக்கிய எமது பய ணத்துக்காக எம்மை மீண்டும் அர்ப்பணிப்போம்.

அரசியல் தலைவர்கள், தொழில் வல்லுநர்கள், விஞ் ஞானிகள், இராஜதந்திரிகள், அதிகாரிகள் மற்றும் அரசு ஊழி யர்கள் மட்டுமன்றி சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரும் இப் பயணத்தில் பங்கு வகிக்க வேண்டும் - என்றார். (அ)

# 140 அத்தியாவசிய மருந்துகளுக்கு வைத்தியசாலைகளில் தட்டுப்பாடு!

கொழும்பு, ஜன. 26

புற்றுநோயாளிகளுக்கு வழங்கப்படும் 43 மருந்துகள் உட்பட 140 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருந்துப் பற்றாக்குறையால் சுகாதாரப் பணிகள் முடங்கி யதுடன், நோயாளிகளும் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

எவ்வாறாயினும் தட்டுப் பாடு உள்ள மருந்துகளை கொள்வனவு செய்ய உத்தரவு கள் வழங்கப்பட்ட போதும் பணம் செலுத்துவதில் சிக்கல்கள் இருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்தார்.

இந்தியக் கடன் வரியின் கீழ் முன்பதிவு செய்யப்படும் புற்று நோயாளர்களுக்கு வழங்கப் படும் 43 மருந்துகள் இன்னும் 15 நாட்களில் இலங்கையை வந்தடையும் என்று அவர் குறிப் பிட்டார்.

பற்றாக்குறையாக உள்ள எஞ்சிய மருந்துகளை இறக்கு மதி செய்ய தேவையான நட வடிக்கை எடுக்கப்படும் என் றும் சுகாதார அமைச்சின் செய லாளர் கூறினார். (அ)

# யாழ்.மாநகர சபை முதன்மை வேட்பாளரை அறிவித்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி!

யாழ்ப்பாணம், ஜன. 26

தமிழ் தேசிய மக்கள் முன்ன ணியின் யாழ் மாநகர சபை முதன்மை வேட்பாளராக தீபன் திலீசன், துணை முதல்வராக வை.கிருபாகரன் கட்சியினால் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று நடத்தப்பட்ட ஊட கவியலாளர் சந்திப்பின்போது தமிழ் தேசியி மக்கள் முன்னணி யின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இது குறித்த அறிவிப்பை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ஊழல்களின் கூடாரமாக யாழ்.மாநகரசபை அமைந்துள் ளது. தமது பொக்கட்டுக்களை நிறப்பி, மாநகரசபையை மிக மோசமாக பாதிப்படைய செய் துள்ளது.

யாரோ ஒருவர் செய்கின்ற வேலைத் திட்டங்களை தாம் செய்ததாக காட்டிக்கொள்ளும் ஆட்சியே யாழ்.மாநகரசபை உள்ளது.

மக்களால் நிராகரிக்கப்பட்ட மொட்டுடன் யானை கூட்டு சேரு வது வேடிக்கையான விடயம்.



வடக்கில் உள்ள நிலைமை போல் தான் தெற்கிலும் நிலைமை இருக்கும். வடக்கில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி யைத் தவிர மற்றைய அனைத்து தரப்புகளும் மக்கள் மட்டத்தில் செல்வாக்கை இழந்து கொண்டு போகின்ற கட்டத்தில் உள்ள னர். பிரிந்து நின்றால் செல் வாக்கை கூட்டலாம் என்று அது மட்டும் தான் வித்தியாசம்.

தெற்கில் மொட்டு மட்டும் யானை செல்வாக்கை முற்றும் முழுதாக இழந்திருக்கின்ற நிலையில் மொட்டு தேர்தலில் நிற்கவே முடியாத அளவுக்கு நிலைமை உள்ளது.

யானை தேர்தல் காலத்தில் முற்று முழுதாக தூக்கி எறியப் பட்ட நிலையில் அவர்கள் கூட்டு சேர்ந்தால் மக்கள் செல் வாக்கு எடுக்கலாமென்று நினைக்கிறார்கள். யதார்த்தத் திற்கு முரணாண வகையில் சிந்தித்து வெற்றி பெறலாம் என்று நினைத்து ஏதோ நட வடிக்கை எடுப்பதாக நினைக் கின்றார்கள்.

தெற்கில் ராஜபக்ஷக்ளுக்கு மக்கள் மத்தியில் தடை விதிக் கப்பட்டுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்க மஹிந்த ராஜபக் ஷவை கட்டிப்பிடித்துக்கொண் டிருப்பதனால் தான் தப்பித்துக் கொள்ளலாம் என நினைப்பது ஒரு வேடிக்கையான விட மாகவே காணப்படுகின்றது - என்றார். (அ)

# சட்டத்தின் ஆட்சி அனைவருக்கும் சமமாக இருப்பது அவசியமாகும்!

## அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்து

கொழும்பு, ஜன. 26

பொருளாதார பிரச்சினைக ளிலிருந்து நாட்டை மீட்டெ டுக்க வேண்டுமெனில், மக்களி டையே முதலில் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும் என ஜே.வி.பியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

பொருளாதாரப் பிரச்னைக ளிலிருந்து நாட்டை மீட்டெ டுக்க புதிய அரசியலமைப்பு ஸ்தாபிக்கப்படவேண்டும் என ஒரு தரப்பினர் கூறுகிறார்கள்.

இன்னொரு தரப்பினர், நிறைவேற்று அதிகார ஜனாதி பதி முறைமை இல்லாது செய் யப்பட வேண்டும் என்று வலி யுறுத்துகிறார்கள்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட கதிரையின் பாரத்தை சுமக்கும் அளவுக்கு எமது தலை வர்களின் மனதளவில் வலிமை யானவர்கள் கிடையாது. இதற்கு பல உதாரணங்கள் உள்ளன.

எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாத, நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கு கட்சி தாவ முடி யாத, அமைச்சர்களின் எண் ணிக்கையை மட்டுப்படுத்திய, மனித உரிமையை வலுப் படுத்தக்கூடிய, சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு முழு உரிமையுடன் வாழக்கூடிய புதிய அரசியலமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட்டே ஆக வேண்டும். ஒரு நாடு வள மடைய வேண்டமெனில் சட் டத்தின் ஆட்சி அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும்.

ஆனால், இன்று எமது நாட் டிலோ பணம் உள்ளவர்களுக்கு ஒரு சட்டமும் பணம் இல்லாத வர்களுக்கு இன்னொரு சட்ட மும் தான் நடைமுறைப்படுத்தப் படுகிறது.

இப்படியாக ஒரு நாட்டி னால் ஒருபோதும் முன்னேற முடியாது. நீதிமன்றக் கட்ட மைப்புக்களை வலுப்படுத்த வேண்டும்.

நீதிமன்றங்களின் மீது நம்பிக்கை இல்லாது போனால், மக்களின் உரிமைகள் மீறப்பட் டுவிடும். இந்த அரசியல் கலா சாரத்தை மாற்றியமைக்க வேண்டும்.

இன்று உலக நாடுகளா கட்டும், ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களாகட்டும், அனைத்துமே இலங்கை தொடர்பாக அதிருப்தியையே வெளிப்படுத்தியுள்ளன.

சிங்கள - தமிழ் - முஸ்லிம். பரங்கியர் என அனைவரும் சமாதானமாக வாழ வேண்டிய சூழலை ஏற்படுத்த வேண்டும்.

மொழி, மத உரிமை முழு மையாக பாதுகாக்கப்பட்ட ஒரு நாடாக மாற வேண்டும். மக்களிடத்தில் ஐக்கியத்தை ஏற் படுத்தாமல், எம்மால் ஒரு போதும் பொருளாதாரததையோ நாட்டையோ முன்னேற்ற முடியாது - என்றார். (அ)

# நகரங்களைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டம் முன்னெடுப்பு!

கொழும்பு, ஜன. 26

75ஆவது சுதந்திர தினத்துக்கு இணைவாக தூய்மையான பசுமை நகரங்களைக் கட்டியெழுப்பும் வேலை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

பசுமையான இலங்கையை உரு வாக்கும் பொறுப்பை இளைஞர்களிடம் கையளிப்பதன் மூலம் 75ஆவது சுதந்திர தினத்துக்கு இணைவாக தூய்மையான பசுமை நகரங்களைக் கட்டியெழுப்பும் வேலைதிட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கு இளைஞர் களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வ தற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வின் எண்ணக் கருவின்படி முன்னெடுக் கப்படும் தேசிய இளைஞர் தளம் வேலைத்திட்டத்தின் கீழ், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் கழக சம் மேளனம் மற்றும் இளைஞர் நாடாளு மன்றம் என்பன ஒன்றிணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன.

முதற்தடவையாக இலங்கையின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவு களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட நகர மொன்று இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்ப கட்டமாக தூய்மைப்படுத்தப் படவுள்ளது.

இதற்கமைய பெப்ரவரி 3ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நாடு முழுவ தும் நடைமுறைப்படுத்தும் வகையில் 335 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 50,000 இளைஞர் யுவதிகளின் பங்களிப் புடன் தெரிவு செய்யப்பட்ட நகரத்தை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

75ஆவது சுதந்திர தினத்துடன் இணைந்ததாக ஆரம்பக் கட்ட நடவடிக் கையாக ஆரம்பிக்கப்படவுள்ள 335 நக ரங்களில் ஆரம்பிக்கப்பட உள்ள இந்த திட்டத்திற்கு, அப்பிரதேசங்களில் உள்ள பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய நிறுவனங்களின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

பிரதேச செயலாளர் அலுவலகம், இலங்கை பொலிஸ் திணைக்களம், சுகா தார சேவைகள் அலுவலகம் மற்றும் ஏனைய சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள் மற்றும் தன் னார்வ தொண்டு அமைப்புகள் ஆகிய வற்றின் ஒத்துழைப்புகளையும் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அடையாளம் காணப் பட்ட நகரம், வருடம் முழுவதும் மாதந்தோறும் தெரிவுசெய்யப்பட்ட தினத்தன்று சுத்திகரிக்கப்பட வேண்டும்.

இதற்காக அத்தொகுதிக்குள் உள்ள டங்கும் ஏனைய இளைஞர் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், பயிற்சி நிலையத்திலுள்ள இளைஞர்கள், சாரணர்கள், மாணவர் படையணி மற் றும் பாடசாலை சூழல் செயற்பாட்டா ளர்கள் ஆகியோரின் பங்களிப்பையும் மறைமுகமாகப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## சரணடைந்த...

இந்த விசாரணையில் நேற்றைய தினம் மேன்முறையீட்டாளரான ஊடகவியலாளர் அவரின் சட்டத்தரணிகள், ஐ.நா. மனித உரிமைகள் செயல்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ ஆகியோர் இந்த விசாரணையில் பங்கேற்றனர்.

மேன்முறையீட்டாளர் சார்பில் மேலதிகமாக முன்னிலையான சட்டத்தரணி ரட்ணவேல், சரணடைந்த புலிகள் தொடர்பான விவர பட்டியல் இராணுவத்திடம் இருப்பதாகக்கூறி ஆதாரங்களை முன்வைத்தார்.

இதற்கு, இராணுவத்தின் சார்பில் கருத்துரைக்கும் அதிகாரியான ரவீந்திர பத்திரகே மெய்நிகர்வழியே பதிலளிக்க முற்பட்டார்.

அவரின் இந்த செயலுக்கு ஆணைக்குழு உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டனர். அத்துடன், இதுவொரு முக்கியமான விசாரணை என்பதால் நேரடியாகவே ஆணைக்குழுவுக்கு முன்பாக எதிர்வரும் மார்ச் 28ஆம் திகதி முன்னிலையாக உத்தரவிடப்பட்டது.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் விண்ணப்பம் ஒன்றுக்கு 14 நாட்களுக்குள் பதில் அளிக்க வேண்டும் என்பது சட்டமாகும். இந்த நிலையில் சரணடைந்த புலிகள் தொடர்பான தகவல்களை கோரும் வழக்குக்கு சுமார் 4 வருடங்களாக பதில் அளிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சுன்னாகம்...

சுன்னாகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல்வேளை இரு குழுக்கள் வாகனங்களை வேண்டுமேன்றே மோதி விபத்தை ஏற்படுத்தின. அத்துடன், ஒருவரை தீயிட்டு கொல்வதற்கு முயற்சிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஏற்பட்ட வாள்வெட்டில் 6 படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

இந்நிலையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர். இதனிடையே, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர் உட்பட மூவர் வவுனியாவுக்கு தப்பிச் சென்றிருந்தனர் என்று தெரியவந்தது.

இந்தநிலையில், தப்பியோடிய மூவரும் நேற்று சட்டத்தரணி மூலமாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர்.

இதனிடையே, இந்த வன் செயலில் ஈடுபட்டவர்களில் அதிகமானோர் வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறுகின்றனர். அத்துடன், இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என மேலும் நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர்களை கைது செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-03)

## அடுத்த...

வர்த்தன கூறியுள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த நேர்காணலில், "சஜித் ஒரு நல்ல மற்றும் அறிவார்ந்த தலைவர். அவர் ஜனவரி 12, 1967இல் பிறந்தார். அவருக்கு கஜகேசரி என்ற யோகம் மிகவும் சக்திவாய்ந்தது. எதிர்காலத்தில் அவர் நாட்டின் ஜனாதிபதியாக வருவார். இந்த நாட்டின் ஏழைகள், ஆதரவற்றோர், அப்பாவி மக்களுக்கு அளவற்ற சேவை செய்த ஜனாதிபதி அவரின் தந்தை. அவரின் அப்பாவை எனக்குத் தெரியும். எனது அப்பாவின் நல்ல நண்பர். சஜித் பிரேமதாஸ இந்த நாட்டின் ஜனாதிபதியாக விரைவில் பதவியேற்கவுள்ள அதிர்ஷ்டசாலி.

என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 2015ஆம் ஆண்டின் பின்னர் மகிந்த ராஜபக்ஷ குடும்பத்துடன் தமக்கு தொடர்பு இல்லை என்றும். அப்போதே அவரின் தோல்வியையும் அவர்களுக்கு இப்போது ஏற்பட்ட நிலைமையையும் தாம் கணித்து விட்டதாகவும், மகிந்த ராஜபக்ஷ அநுராதபுரத்தில் பெண் ஒருவரிடம் சோதிடம் பார்க்க சென்று தவறு இழைத்து விட்டார் என்றும் அவர் கூறியுள்ளார்.

2015ம் ஆண்டு மகிந்த ராஜபக்ச வெற்றி பெறுவார் என்று இவர் கூறியதைத் தொடர்ந்தே தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு 2 ஆண்டுகள் முன்னதாகவே மகிந்த தேர்தலுக்கு சென்றார்.

## தேர்தல்கள்...

தேசிய கொள்முதல் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு புதிய உறுப்பினர்களை நியமிக்க விண்ணப்பம் கோருவது என்றும் அது தொடர்பில் வர்த்தமானி வெளியிடப்படும் எனவும் நேற்றைய கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடைபெற்ற இந்தக் கன்னி அமர்வில், பிரதமர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம், கலாநிதி பிரதாப் இராமானுஜம், கலாநிதி திருமதி அனுலா விஜயசுந்தர, கலாநிதி திருமதி தினேஷா சமரத்ன ஆகியோர் பங்கேற்றனர். இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் பங்கேற்கவில்லை.

மேலும், இந்தக் கூட்டத்தில் அரசமைப்பு பேரவையின் எதிர்கால செயல்பாடுகள் குறித்தும் பேசப்பட்டன. அத்துடன், பேரவையின் கடமை மற்றும் செயல்பாடுகளை சுதந்திரமானதாகவும் பொறுப்புணர்வுடனும் வெளிப்படையாகவும் செயல்படுத்த பேரவை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. (ஐ)

## தமிழ்த் தேசியக்...

நகர மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த அறிமுக கூட்டத்தில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளான பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், த. சித்தார்த்தன், கோவிந்தன் கருணாகரம் (ஜனா) முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம். கே. சிவாஜிலிங்கம், சிரேஷ்ட சட்டத்தரணி சிறிகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சி சார்பாக வேந்தன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில், எதற்காக ஒன்றிணைந்து இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்பது குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் சின்னமாக குத்துவிளக்கு தெரிவு செய்யப்பட்டமை குறித்தும்தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகமும் இடம்பெற்றது. (ஐ)

## மாவீரரின்...

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இவ்வாறு இடிக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

லெப். போசன் 1989ஆம் ஆண்டு விழுப்புண் அடைந்து சிகிச்சைக்காக தமிழ்நாடு சென்றிருந்தார். சிகிச்சை பெற்று வந்த அவரை இந்திய உளவுத்துறை அறிந்து கைது செய்ய முயன்றது. அந்தச் சமயம் சயனைட் அருந்தி அவர் வீரமரணம் அடைந்தார்.

இவருக்கான கல்லறையை தற்போது தமிழகத்தில் ஆட்சியிலிருக்கும் திராவிட முன்னேற்ற கழகத்தின் தாய்க் கட்சியான திராவிடர் கழகத்தின் கி. வீரமணி அமைத்து திறந்து வைத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சுமந்திரன் எம். பியே உடைத்தார்!

## செல்வம் அடைக்கலநாதன் பகிரங்க சாடல்



மன்னார், ஜன. 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கியவர் சுமந்திரன்தான். தமிழரசுக் கட்சியினர் கூட்டமைப்பை நேசிக்கவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பகிரங்கமாக சாடியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் மாவட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் அறிமுகம் நேற்று நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், தமிழரசு கட்சியினர் இழுத்தடித்து விட்டு இறுதியில் சொல்வார்கள் நாம் கேட்கும் ஆசனங்களை தர முடியாது என்று. அப்போது நாங்கள் வெளியில் வரமுடியாது. வந்தால் மக்கள் என்ன கருதுவார்கள் என்றால் இவர்கள் ஆசனம் இல்லை என்று வெளியே வந்தார்கள் என்று.

தமிழரசினர் கூட்டமைப்பை நேசிக்கவில்லை. அனைவரும் கூட்டமைப்பில் இணைய வேண்டும் என்று நாங்கள் சொன்னபோது சம்பந்தன் சொல்கிறார் நல்ல விடயம் வாருங்கள் என்கிறார்.

ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் சுமந்திரன் சொல்கிறார், "இல்லை எங்களுக்கு இரண்டு மூன்று பேரில் உடன்பாடு இல்லை அதனால் சேர்வது கஷ்டம் என்கிறார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உடைவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கியவர் சுமந்திரன்தான் என்றும் சொன்னார். (ஐ)

# அமைச்சரவை மறுசீரமைப்பில் எனது பெயர் நியாயமானதே!

## ரோஹித அபேகுணவர்த்தன

கொழும்பு, ஜன. 26

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் நான். ஆகவே, அமைச்சரவை மறுசீரமைப்பில் எனது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளமை நியாயமானதே.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சியாக செயற்பட தயாராகவுள்ளோம். சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப அரசியல் கொள்கைகளை மாற்றிக்கொள்ள மாட்டோம் என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட சிறீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்பதாக எதிர்தரப்பினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். தேர்தலை பிற்போட வேண்டிய தேவை எமக்கு கிடையாது. நாட்டுக்கு சேவையாற்றியுள்ளோம். ஆகவே, மக்கள் மத்தியில் எம்மால் தாராளமாக செல்லலாம்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தாமரை மொட்டு சின்னத்தை முன்னிலைப்படுத்தி 252 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாறுபட்ட சின்னத்தில் போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்கு தயாராகவுள்ளோம்.

பொருளாதார மீட்சிக்காக வரி அதிகரிப்பை தவிர்த்து மாற்று வழிமுறை ஏதும் தற்போது கிடையாது. வரி கொள்கையை மறுசீரமைக்குமாறு எதிர்வரும் வாரம் ஜனாதிபதி தலைமையில் இடம்பெறவுள்ள ஆளும் தரப்பினர் கூட்டத்தில் வலியுறுத்தவுள்ளோம். பொருளாதார விவகாரங்களில் அரசியல் தலையீடு ஏதும் கிடையாது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அமைச்சரவை அமைச்சுக்களை விஸ்தரிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக எதிர்தரப்பினர் குறிப்பிடுகின்றனர். அரசியலமைப்பின் பிரகாரம், அமைச்சரவை முழுமைபடுத்தப்படவில்லை. சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் நான். அமைச் சரவை மறுசீரமைப்பில் எனது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளமை நியாயமானதே.

அரசியலில் பல ஆண்டுகாலம் எதிர்க்கட்சியிலும் அரசாங்கத்திலும் பதவி வகித்துள்ளோம். ஆகவே, வெற்றி / தோல்வியை மக்கள் தீர்மானிப்பார் கள். ஆளும் தரப்பிலும் எதிர்க்கட்சியிலும் இருக்க தயார். பதவி இல்லை என்பதற்காக கட்சிக் கொள்கையை ஒருபோதும் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்றார்.

## தேர்தல் குழுவின்...

ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்களை விண்ணப்பங்கள் மூலம் கோரவுள்ளதாக நேற்றுக்கூடிய கன்னியமர்வில் அரசமைப்பு பேரவை தீர்மானித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இன பிரச்னை...

நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் நோக்கிலும் நடைபெறும் இந்திக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியத் தரப்பு கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சியின் சார்பில் இரா. சம்பந்தன், எம். ஏ. சுமந்திரனும் தமிழ் மக்கள் கூட்டணியின் க. வி. விக்னேஸ்வரனும் பங்கேற்பார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேசமயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புளொட்டின் த. சித்தார்த்தன், ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் வேறுபணிகளின் நிமித்தம் பங்கேற்கமாட்டார்கள் என்று அறிய வருகிறது. இதேநேரம், இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் பங்கேற்க மாட்டார்கள் என்று தெரியவருகின்றது.

இதேநேரம், விமல் வீரவன்ஸ தலைமையிலான கூட்டணியும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என்று அறிவித்துள்ளது.

இனப் பிரச்னை தீர்வு தொடர்பில் பேசுவதற்காக நடத்தப்படும் இரண்டாவது சர்வகட்சி சந்திப்பு இதுவாகும். முதலாவது சர்வகட்சி சந்திப்பு கடந்த டிசெம்பர் 13ஆம் திகதி நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பொருளாதாரத்தை கட்டியெழுப்ப மக்களிடையே ஐக்கியம் அவசியம்

## வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.



**கொழும்பு, ஜன. 26**

**பொருளாதார பிரச்னைகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டுமெனில், மக்களிடையே முதலில் ஐக்கியத்தை ஏற்படுத்தவேண்டும் என ஜே.வி.பி யின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதாரப் பிரச்னைகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்க புதிய அரசியலமைப்பு ஸ்தாபிக்கப்பட வேண்டும் என ஒரு தரப்பினர் கூறுகிறார்கள்.

இன்னொரு தரப்பினர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாது செய்யப்படவேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட கதிரையின் பாரத்தை சுமக்கும் அளவுக்கு எமது தலைவர்களின் மனதளவில் வலிமையானவர்கள் கிடையாது. இதற்கு பல உதாரணங்கள் உள்ளன.

எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாத, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்சி தாவ முடியாத, அமைச்சர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்திய, மனித உரிமையை வலுப்படுத்தக்கூடிய, சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு முழு உரிமையுடன் வாழக்கூடிய புதிய அரசியலமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட்டே ஆகவேண்டும்.

ஒரு நாடு வளமடைய வேண்டுமெனில் சட்டத்தின் ஆட்சி அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும்.

ஆனால், இன்று எமது நாட்டிலோ பணம் உள்ளவர்களுக்கு ஒரு சட்டமும் பணம் இல்லாதவர்களுக்கு இன்னொரு சட்டமும் தான் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இப்படியாக ஒரு நாட்டினால் ஒருபோதும் முன்னேற முடியாது. நீதிமன்றக் கட்டமைப்புக்களை வலுப்படுத்த வேண்டும்.

நீதிமன்றங்களின் மீது நம்பிக்கை இல்லாது போனால், மக்களின் உரிமைகள் மீறப்பட்டுவிடும். இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கவேண்டும்.

இன்று உலக நாடுகளாகட்டும், ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களாகட்டும், அனைத்துமே இலங்கை தொடர்பாக அதிருப்தியையே வெளிப்படுத்தியுள்ளன.

சிங்கள- தமிழ்- முஸ்லிம். பரங்கியர் என அனைவரும் சமாதானமாக வாழ வேண்டிய சூழலை ஏற்படுத்த வேண்டும்.

மொழி, மத உரிமை முழுமையாக பாதுகாக்கப்பட்ட ஒரு நாடாக மாற வேண்டும். மக்களிடத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்தாமல், எம்மால் ஒருபோதும் பொருளாதாரத்தையோ நாட்டையோ முன்னேற்ற முடியாது- என்றார். (அ)

# 6 பொருட்களின் விலை குறைப்பு!

கொழும்பு, ஜன. 26

இன்று வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் லங்கா சதொச 6 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைக்கத் தீர்மானித்துள்ளது.

அதன்படி, சிவப்பு மிளகாய், அரிசி, பருப்பு உள்ளிட்ட 6 பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளது.

குறைக்கப்பட்ட விலைகளில் பொருட்களை நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து லங்கா சதொச விற்பனை நிலையங்களிலிருந்தும், பெற்றுக்கொள்ள முடியுமென சதொச அறிவித்துள்ளது.

சிவப்பு மிளகாய் - 1700 ரூபாய் (-30)
வெள்ளை பச்சை அரிசி - 169 ரூபாய் (-10)
சிவப்பரிசி - 179 ரூபாய் (-8)
வெள்ளை நாடு - 184 ரூபாய் (-5)
சிவப்பு பருப்பு - 365 ரூபாய் (-5)
கீரி சம்பா - 235 ரூபாய் (-4) (அ)

# கப்ரால் விடுதலை!

கொழும்பு, ஜன. 26

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், வழக்கு ஒன்றில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தினியாவல பாலித தேரரால், அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட வழக்கை அவர் வாபஸ் பெற்றுள்ளார்.

இதனையடுத்து, சந்தேகநபரான அஜித் நிவார்ட் கப்ராலை வழக்கில் இருந்து விடுவிக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று உத்தரவிட்டார். (அ)

# சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பியுடன் இந்திய தூதரக அதிகாரி சந்திப்பு!

மன்னார், ஜன. 26

மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய தூதரகத்தின் 2 ஆம் நிலை அதிகாரி நாகராஜன் ராமசாமி வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனைச் சந்தித்து கலந்துரையாடி உள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினரின் இல்லத்தில் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின்போது தற்போதைய அரசியல் நிலவரங்கள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். (அ)



# கடன் நிவாரணம் வழங்கமுடியாது!

## மத்திய வங்கி ஆளுநர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 26

வங்கித் துறைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நடைமுறையை தொடர்ச்சியாக ஊக்குவிப்பதில்லையென மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த வணிகங்கள் இன்னும் கடன் நிவாரணங்களை எதிர்பார்க்கும் நிலையில் இருப்பதாக தெரிவித்தே அவர் இவ்வாறு கூறினார்.

வணிகங்கள் மீட்சியை நோக்கி நகர்வதற்கான வேறு வழிகளை ஆராய வேண்டும் என்றும், வங்கிகளில் தொடர்ந்தும் சார்ந்திருக்கக் கூடாது அவர் என்றும் வலியுறுத்தினார்.

நிவாரணம் கேட்கும் முக்கிய துறைகளில் சுற்றுலாவும் ஒன்றாகும் என்றும் தமது துறையை மேம்படுத்தி அதன் மூலம் சுற்றுலா துறையை மீட்டெடுக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் வணிகங்கள் தொடர்பில், கடன் நிவாரணம் என்ற இடைக்காலத் தடையைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக, முடிந்தவரை கடனை மறுசீரமைக்குமாறு மத்திய வங்கி வங்கிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார். (அ)

# இலவச கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஜன. 26

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் சிறுவர் இலக்கிய துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கான இலவச ஒருநாள் கருத்தமர்வு நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தமர்வானது எதிர்வரும் ஞாயிறுக்கிழமை காலை 9 மணி முதல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் தங்கள் பெயர் விவரங்களை கடமை நேரத்தில் 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கொழும்பு துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய மீண்டும் சீனாவிடம் செல்கின்றது அரசாங்கம்!

கொழும்பு, ஜன. 26

150 மில்லியன் டொலர் முதலீட்டில் பொது-தனியார் பங்காளித்துவமாக முன்மொழியப்பட்ட கொழும்பு தெற்கு துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் முதல் கட்டத்தை இலங்கை முன்னெடுக்க உள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையங்கள் பிரேரணையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தை தெற்காசியாவில் சேவை வழங்கல் மையமாக மாற்றுவதற்கு அரசாங்கம் முனைப்புடன், துறைமுகங்கள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழுவின் மதிப்பீட்டின்படி, தென் முனையிற்கு சொந்தமான விநியோகப் பகுதிகள் பொது - தனியார் பங்காளித்துவத்தின் கீழ் அபிவிருத்தி செய்யக்கூடிய பகுதிகளாக அடையாளம் காணப்பட்டன.

அதன்படி சைனா மெர்ச்சன்ட் போர்ட் கம்பெனி, கொழும்பு இன்டர்நேஷனல் கன்டெய்னர் டெர்மினல்ஸ் கம்பெனி மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

# ரூபாயின் பெறுமதியில் வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 26

வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று முன் தினத்தை விட நேற்றும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

எவ்வாறாயினும், ஸ்ரேலிங் பவுண்ட் மற்றும் சுவிஸ் பிராங்குக்கு எதிராக ரூபாயின் மதிப்பு சற்று அதிகரித்துள்ளது.

அதன்படி, ஸ்ரேலிங் பவுண்டின் நேற்றைய விற்பனை பெறுமதி 459.11 ரூபாயாகவும், கொள்வனவு பெறுமதி 442.29 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது.

யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 406.29 ரூபாயாகவும், கொள்வனவு பெறுமதி 390.58 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், அமெரிக்க டொலரின் விற்பனை விலை 371.39 ரூபாயாகவும், கொள்வனவு விலை 360.49 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.